විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/எச்/ஜீஈஎன்/66   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2016 செப்தம்பர் 30

தலைவர்,

பொது முயற்சிகள் குழு.

**இலங்கை மத்திய வங்கியின் அரசாங்க பொதுப்படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளின் வழங்கல் தொடர்பில் 2016 யூன் 29 ஆந் திகதி விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் 2016 செப்தம்பர் 23 ஆந் திகதி வரையான காலத்தில் பொது முயற்சிகள் குழுவினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினாலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல்களிற்கமைய அந்த அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நாளதுவரையாக்கல்களை உள்ளடக்கிய அறிக்கை.**

---

மேற்படி விடயத்திற்குரிய விசாரணை நடவடிக்கைகளுக்காக 2016 செப்தம்பர் 23 திகதி கூட்டப்பட்ட பொது முயற்சிகள் குழுவின் போது 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் சேகரிக்கப்பட்ட தகவல்களையும் கருத்திற்கொண்டு அந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2016 யூன் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையினை நாளதுவரையாக்கி பொது முயற்சிகள் குழுவிற்கு வழங்குவதற்கான எனது இணக்கப்பாட்டினை வெளிப்படுத்துகின்றேன்.

02. அந்த அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பமிடப்பட்டது : எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

**இலங்கை மத்திய வங்கியின் அரசாங்க பொதுப் படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளின் வழங்கல் தொடர்பில் 2016 யூன் 29 ஆந் திகதி விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையான காலத்தில் பொது முயற்சிகள் குழுவினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினாலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல்களிற்கமைய அந்த அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நாளதுவரையாக்கல்களை உள்ளடக்கிய அறிக்கை.**

---

## 1. மேற்படி விசேட அறிக்கையினை வழங்குவதற்கான பின்னணியும் அறிக்கையின் தன்மையும்

2016 மே 06 ஆந் திகதி 1430 மணிக்கு இடம்பெற்ற பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கடந்தகால மற்றும் தற்போதைய திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட ஆலோசனை மற்றும் அதற்கான இணக்கப்பாட்டின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் 2016 யூன் 08 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதமும் (பின்னிணைப்பு i) இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களில் காணப்படக்கூடிய அந்தரங்கத் தன்மை காரணமாக அவற்றின் இரகசியத் தன்மையினை பாதுகாக்கும் பொருட்டு சட்டமா அதிபரினால் 2004 பெப்ரவரி 12 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த அவரது அபிப்பிராயம் (பின்னிணைப்பு ii) மற்றும் அந்த அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டு மத்திய வங்கியின் ஆளுனரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதம் (பின்னிணைப்பு iii) என்பனவும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆகையால் இந்த அறிக்கையின் பின்னிணைப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ள சில ஆவணங்கள் அவ்வாறே இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எனக் கருதப்படுகின்றமையால் அந்த பின்னிணைப்புக்கள் இன்றிய அறிக்கையொன்று உங்களது குழுவுக்கும் அந்த பின்னிணைப்புக்களுடன் கூடிய அறிக்கையொன்று பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகருக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எவ்வாறாயினும், கௌரவ சபாநாயகர் அவர்களின் செயலாளரின் 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு இணங்க 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி பின்னிணைப்புக்களுடன் கூடிய அறிக்கை 26 பிரதிகளுடன் கௌரவ சபை உறுப்பினர்களிற்கு வழங்குவதற்காக கௌரவ சபாநாயகர் அவர்களிற்கு கையளிக்கப்பட்டது)

அந்த பின்னிணைப்புக்கள் அற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், விசேட கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையில் விசாரணை செய்வதற்காக பின்வரும் திகதிகளில் பொதுமுயற்சிகள் மீதான குழு கூடியது.

| திகதி | கலந்துகொண்ட தரப்பினர்கள் | | |
|---|---|---|---|
| | குழு உறுப்பினர்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் | மத்திய வங்கி மற்றும் தொடர்புடைய அமைச்சு உத்தியோகத்தர்கள் |
| 2016 யூன் 29 | ✓ | ✓ | x |
| 2016 யூலை 05 | ✓ | ✓ | x |
| 2016 யூலை 07 | ✓ | ✓ | ✓ |
| 2016 ஆகஸ்ட் 12 | ✓ | ✓ | ✓ |
| 2016 ஆகஸ்ட் 23 | ✓ | ✓ | ✓ |
| 2016 செப்தெம்பர் 08 | ✓ | ✓ | மத்திய வங்கியின் ஆளுநர் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தார் |
| 2016 செப்தெம்பர் 23 | ✓ | ✓ | x |

அதற்கமைய, 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதி கூடிய குழுவினால் 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் சேகரிக்கப்பட்ட தகவல்கள் கருத்திலெடுக்கப்பட்டு அந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2016 யூன் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை நாளதுவரையாக்கப்பட்டு பொது முயற்சிகள் மீதான குழுவிற்கு புதிய அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த நாளதுவரையாக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையினை பொது முயற்சிகள் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ் அறிக்கைக்கு உரித்தாக இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என எண்ணிய ஆவணங்கள் இது வரையில் கௌரவ சபாநாயகர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க குழு உறுப்பினர்களுக்கு இது வரையில் வழங்கப்பட்டுள்ளமையால் அத் தகவல்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் வெளிப்பட்டிருந்த விடயங்கள் காரணமாக அத் திகதியில் வெளியிடப்பட்டிருந்த விசேட அறிக்கையின் 5.1.9 மற்றும் 5.1.11 ஆம் பந்திகள் மாத்திரம் திருத்தத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அந்த திருத்தத்தின் காரணமாக அறிக்கையின் முடிவுரைக்கு எதுவித தாக்கமும் ஏற்படவில்லை.**

## 2. இந்த அறிக்கையினை தயாரிக்கும் போது பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட்டது.

### 2.1 பின்வரும் ஆவணங்களைப் பரிசோதித்தல்

(2016 யூன் 29 ஆந் திகதி வரை)

2.1.1 இலங்கை மத்திய வங்கியினால் திறைசேரி முறிகளை வழங்குகையில் பின்பற்றிய ஒழுங்குமுறையினைக் காட்டுகின்ற செயற்பாட்டு கைநூல்

2.1.2 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் புலனாய்வு செய்வதற்காக பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவின் விசேட இணைப்புச் சபையினால் நடாத்தப்பட்ட பரிசோதனை தொடர்பிலான வாய்மொழிமூல சாட்சியமளித்தல் குறிப்புக்கள்.

2.1.3 மேற்படி 2.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திறைசேரி முறிகளை வழங்குதலை பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை. (2015 மே 19 ஆந் திகதி இந்த அறிக்கை பாராளுமன்ற கௌரவ அமைச்சர் கிரிஎல்ல அவர்களால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது)

2.1.4 மேற்படி 2.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் பரிசோதனை அறிக்கை.

2.1.5 1949 இன் 58 ஆம் இலக்க நாணயச் சட்டங்கள் அதிகாரச்சட்டம் அதற்கான திருத்தங்களுடன்

2.1.6 தொடர்புடைய உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையினதும் கேள்விச் சபையினதும் தீர்மானங்கள்

2.1.7 இலங்கை மத்திய வங்கியின் இணையத்தில் வெளியிடப்பட்ட தகவல்களும் தரவுகளும்

(2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர்)

2.1.8 2016 யூன் 29 ஆந் திகதி பொது முயற்சிகள் மீதான குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைக்காக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கிடைத்த எழுத்துமூல விளக்கங்கள்.

2.1.9 2016 யூலை 07, 2016 ஆகஸ்ட் 12, 2016 செப்தெம்பர் 08 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவில் முன்வைக்கப்பட்ட வாய்மொழி மூல சாட்சியமளித்தல் குறிப்புக்கள்.

2.1.10 இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சுக்கு பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட வினாக்கொத்திற்கு வழங்கப்பட்ட பதில்கள்.

**2.2 ஏனைய பரிசோதனைகள்**

2.2.1 பல்வேறு முறைகளிலும் பெற்றுக்கொண்ட தகவல்களை பகுப்பாய்வு ரீதியாக மீளாய்வுசெய்தல்

2.2.2 முதலாந்தர சந்தைக்குரிய சில தகவல்களை பரீட்சித்தல்

2.2.3 இரண்டாந்தர சந்தைக்குரிய சில தகவல்களைப் பரீட்சித்தல்

2.2.4 இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களை மதிப்பாய்வுக்குஉட்படுத்துதல்

2.2.5 தொடர்புடைய தரப்பினர்களுடன் கலந்தாலோசித்தல்

## 3. நோக்கெல்லை வரையறுக்கப்படுதல்

இந்த அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களிலிருந்து முடிவுக்கு வருகையில் எனது நோக்கெல்லை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரையரைகளுக்கு உட்பட்டிருந்தமையினை கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

3.1 விடயப்பரப்புக்குரிய செயற்பாடுகளிற்காக இலங்கை மத்திய வங்கி ஏதேனுமோர் கையேட்டில் காட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறைக்கேற்ப செயற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அக்கையேடு அதனது நாணயச் சபையினால் அல்லது ஏனைய அதிகாரமுள்ள நிறுவனமொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த தொழிற்பாட்டுக் கையேடொன்று அல்ல என்பது எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தமை. (பின்னிணைப்பு iv மற்றும் v)

3.2 விடயப்பரப்புக்குரிய செயற்பாடுகள் தொடர்பில் பரிசோதனை நடாத்துவதற்கான பணி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த திகதிக்கும் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றிருந்த திகதிக்குமிடையே குறிப்பிடத்தக்களவு கால இடைவெளி காணப்பட்டமை.

3.3 தொடர்புடைய விடயப்பரப்புக்குரிய விடயங்கள் சம்பந்தமான ஆழ்ந்த அறிவுள்ள நிதி மற்றும் பொருளாதார நிபுணர்களின் உதவியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு காலம் இல்லாமை மற்றும் இந்த அறிக்கையின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத்தன்மை

தொடர்பான சிக்கலான நிலமை காரணமாக அவ்வாறான உதவியை பெற்றுக்கொள்ளல் கேள்விக்குறியாயிருத்தல்.

3.4 மேற்படி 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர்கள் இலங்கை மத்திய வங்கியில் காணப்பட்ட போதிலும், அந்த உத்தியோகத்தர்களின் உதவியினை பக்கச்சார்பற்ற விதத்தில் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியாக காணப்படல்.

3.5 குறித்த விடயம் சார்ந்த மிகவும் முக்கியமான இரண்டாந்தர சந்தை தொடர்பான தகவல்களை அந்த மூன்றாம் தரப்பினரிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு அல்லது அவர்களைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காணப்படாமை.

3.6 இலங்கை மத்திய வங்கிக்கு இந்த அறிக்கையில் (பின்னிணைப்பு vi) காண்பிக்கப்பட்டுள்ள முதலாந்தர வணிகர்களிற்கு பொருண்மையான செல்வாக்கினைச் செலுத்துவதற்கு இயலுமை காணப்பட்டதா என்பதனை அறிந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை.

3.7 முதலாந்தர வணிகர்கள் மற்றும் முதலாந்தர வணிகர்களுக்கு இடையிலும், மத்திய வங்கியின் ஆளுநருக்கும் முதலாந்தர வணிகர்களுக்கு இடையிலும், அந்தந்த ஆட்களிற்கிடையே போதியளவு செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஆற்றல் காணப்பட்டதா என்பதனை அறிந்து கொள்வதற்கு வாய்ப்புக் காணப்படாமை.

3.8 இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களிற்கும் முதலாந்தர வணிகர்களுக்கும் இடையில் இடம்பெற்றிருந்த தொலைபேசி உரையாடல்கள் பதிவுசெய்து வைக்கப்பட்டிருக்காமையினால் அத் தகவல்களை பரிசோதிக்க முடியாதிருந்தமை.

3.9 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்றிருந்த ஏலவிற்பனை தொடர்பில் பதிவு செய்யப்பட்டிருந்த நேரடிக் காட்சிகளை பௌதீக ரீதியில் பரிசோதிக்காமை

3.10 இந்த அறிக்கையினை தயாரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களிடையே காணப்பட்ட இரகசியமும் அந்தரங்கமுமான தகவல்களை சரியாக இனங்கண்டு தருமாறு மத்திய வங்கியின் ஆளுநரை எழுத்துமூலம் கோரியிருந்த போதிலும், அதற்காக வழங்கப்பட்ட பதிலளிப்பின் படி வழங்கப்பட்டுள்ள எல்லாத் தகவல்களையும் இரகசியமானவையாக கருதிக்கொள்ள வேண்டியிருந்தமையினால் அறிக்கையிடுவதற்கு வரையறை காணப்பட்டமை. (பின்னிணைப்பு iii)

## 4. இலங்கை மத்திய வங்கியினால் திறைசேரி முறிகளை வழங்கும் ஒழுங்குமுறையினை அறிமுகம் செய்தல்

4.1 இலங்கையின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை பேணிச்செல்வதனை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கி ஐந்து பேர்களை உள்ளடக்கிய மத்திய வங்கியின் நாணயச் சபையின் தலைவராகவும் உள்ள மத்திய வங்கியின் ஆளுநரால் இயக்கிச் செல்லப்படுகின்றது (பின்னிணைப்பு vii). அத்துடன் நாணயச் சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய வங்கியின் ஆளுநர் இலங்கை மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் காணப்படுகின்றார். (பின்னிணைப்பு viii) பொதுத் திறைசேரியின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் அறிவித்தலிற்கமைய அரசாங்கத்தின் எதிர்வரும் மாதத்திற்குரிய நிதித் தேவையினை நிறைவேற்றுவதற்காக திறைசேரி பிணையங்கள் (Treasury Securities) அல்லது திறைசேரி உண்டியல்களையும் (Treasury Bills) திறைசேரி முறிகளையும் (Treasury Bonds) வழங்குதல் தொடர்பான பொறுப்பு இலங்கை மத்திய வங்கிக்குரியதாகும் (பின்னிணைப்பு ix). ஓராண்டுக்கு குறைவான முதிர்வுக் காலம் கொண்டவையாக (Maturity) திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்படுவதுடன் ஓராண்டுக்குக் கூடிய முதிச்சிக்காலம் கொண்டவையாக திறைசேரி முறிகள் வெளியிடப்படுகின்றன. இந்த முறிகளின் முகப் பெறுமதி (Face Value) ரூபா 100 பெறுமதி கொண்டவையாகும். இதன்போது மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்குத் தேவையான நிதி வழங்கப்படுவதுடன் நாணயச்சட்ட அதிகாரச்சட்டத்தின் 106(1) ஆம் பிரிவின் (பின்னிணைப்பு x) பிரகாரம் அரசாங்கத்தின் பிரதிநிதியாக செயற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிணையங்களை கொள்வனவு செய்வதற்குத் தகுதிவாய்ந்தவையாக 16 நிறுவனங்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அதில் ஒரு நிறுவனம் விலகிக் கொண்டிருந்தது. (பின்னிணைப்பு vi). அந்த நிறுவனங்களிடையே அரசாங்க நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் உள்ளன. இந்த நிறுவனங்கள் முதலாந்தர வணிகர்கள் (Primary Dealers) என அறிமுகம் செய்யப்படுகின்றனர். மேலும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் முதலாந்தர சந்தையிலிருந்து திறைசேறி பிணைகளை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை திறைசேரி முறிகளை வழங்குவதற்காக 2 ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தன. திறைசேரி முறிகளை வழங்குவது தொடர்பில் பகிரங்கப்படுத்தும் அறிவித்தலின் படி மேலே குறிப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட முதலாந்தர வணிகர்களிடமிருந்து கூறுவிலைகளைக் கோரி அதற்கமைய முறிகளை ஏலவிற்பனை (Auction) செய்வதன் மூலம் அவசியமான நிதித் தேவையினை நிறைவேற்றிக் கொள்தல்

அதில் முதலாவது முறையாகும். நேரடியாக முதலாந்தர வணிகர்களுக்கு பிணையங்களை வழங்குதல் அல்லது தனிப்பட்ட வழங்கல் முறை இரண்டாவது முறையாகும் (Direct Placement/Private Placement). மத்திய வங்கியின் அரச பொதுப் படுகடன் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நிறையளிக்கப்பட்ட சராசரி வருவாய் வீத (Weighted Average Yield Rate) அடிப்படையில் முதலாந்தர வணிகர்களுக்கு முறிகளை கொள்வனவு செய்வதற்காக சந்தர்ப்பம் வழங்குதலே இந்த இரண்டாவது முறையில் இடம்பெற்றிருந்தது. இதன்போது இந்த நிறையளிக்கப்பட்ட சராசரி வருவாய் வீதத்தைக் கணித்தல் 2 முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. கிட்டிய முந்திய காலத்தில் இடம்பெற்ற முறிகளின் ஏலவிற்பனையின் போது ஒத்த முதிர்ச்சிக் காலம் கொண்ட (Maturity Period) முறிகளிற்காக முன்வைக்கப்பட்ட வருவாய் விகிதத்தில் கணிக்கப்பட்ட சராசரிப் பெறுமதியினை வருவாய் வீதமாக எடுத்துக்கொள்ளல் அதிலொரு முறையாகும். மற்றைய முறையாவது இரண்டாந்தரச் சந்தையில் (Secondary Market) நிலவுகின்ற சராசரி முதிர்ச்சிக்காலம் கொண்ட முறிகளின் வருவாய் வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் வருவாய் வீதத்தினைக் கணிப்பிடுவதாகும். நேரடி வழங்கல் முறை ஏலமிடப்படும் நாட்கள் அல்லாத ஏனைய எல்லா வேலை நாட்களிலும் திறந்திருப்பதுடன் முறிகளை கொள்வனவு செய்வதற்கு விரும்புகின்ற முதலாந்தர வணிகர்கள் அரச பொதுப்படுகடன் திணைக்களம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வருவாய் வீதத்தின் கீழ் விற்பனைக்காகவுள்ள முறிகளை கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும். திறைசேரி முறிகளின் வழங்குதலின் போது பின்பற்றப்படுகின்ற ஒழுங்குமுறை அரச பொதுப்படுகடன் திணைக்களத்தின் தொழிற்பாட்டு கையேட்டில் (Public Debt Department Operation Manual) காண்பிக்கப்பட்டுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 02 முதல் 05 வரை)

4.2 திறைசேரி முறிகள் வட்டி வீதமொன்றில் (Coupon Rate/Interest Rate) பல்வேறு முதிர்ச்சிக்காலம் கொண்டவையாக வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படுகின்ற முறிகளின் முகப்பெறுமதியின் பிரகாரம் வட்டி வீதத்தின் அடிப்படையில் அரையாண்டுக்கொரு முறை அரசாங்கத்தினால் வட்டி வழங்கப்படுகின்றது (பின்னிணைப்பு xi). முறிகளை ஏலமிடுகையில் கொடுக்கல் வாங்கல் செய்வோர்களால் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வட்டி வீதத்தின் அடிப்படையில் பல்வேறுபட்ட விலைகளின் கீழ் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டு

வட்டத்தில் (Premium) அதாவது முகப்பெறுமதிக்கு கூடியவிலைக்கு, சமமான விலைக்கு (at par) அதாவது முகப் பெறுமதிக்குச் சமமான விலைக்கும்,கழிவுடன் கூடிய விலைக்கும் (discount) அதாவது முகப்பெறுமதிக்கு குறைவான விலையிலும் கொள்வனவு செய்வதற்கு முன்வருவர். இதன்போது அவர்களால் வட்டத்துடன் கோரப்பட்டிருப்பின் முறிகளின் வருவாய் வீதம் வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைந்த பெறுமதியை கொண்டிருப்பதுடன் சமமான விலைக்கு கோரப்பட்டிருப்பின் வட்டி வீதத்திற்கு சமமான பெறுமதியினையும் கழிவு விலையில் கோரப்பட்டிருப்பின் வட்டி வீதத்தைக் காட்டிலும் உயர்ந்த பெறுமதியினையும் கொண்டிருக்கும். அதற்கமைய வட்டி வீதத்தைக் காட்டிலும் உயர்வான வருவாய் வீதம் காணப்படும் சந்தர்ப்பங்களில் முறிகளின் முகப்பெறுமதியைக் காட்டிலும் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றது என்றும், வட்டி வீதமும் வருவாய் வீதமும் சமமாக காணப்படுகையில் முறிகள் முகப்பெறுமதியில் வழங்கப்படுகின்றன என்றும், வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைவாக வருவாய் வீதம் காணப்படும் சந்தர்ப்பங்களில் முறிகளின் முகப்பெறுமதியைக் காட்டிலும் உயர்ந்த விலையில் வழங்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்ட முடியும். அதன்படி வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைந்த வருவாய் வீதத்திற்கு முறிகளை வழங்குவதன் மூலம் கூடிய விலை கிடைப்பதுடன் அதனூடாக அரசாங்கத்திற்கு மேலதிக நிதி அனுகூலம் கிடைக்கின்றது. அவ்வாறே வட்டி வீதத்தைக் காட்டிலும் உயர்வான வருவாய் வீதத்திற்கு அல்லது கழிவுசெய்யப்பட்ட வீதத்தில் முறிகளை வழங்குவதன் காரணமாக அரசாங்கத்திற்கு நிதிரீதியான பிரதிகூலம் ஏற்படுகின்றது. வட்டி வீதத்திற்குச் சமமான வருவாய் வீதத்தில் முறிகள் வழங்கப்படுமாயின் அரசாங்கத்திற்கு மேலதிக அனுகூலமோ அல்லது பிரதிகூலமோ ஏற்படுவதில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 05 முதல் 07 வரை)

4.3 2014 சனவரி மாதத்திலிருந்து 2016 மே மாதம் வரை அரசாங்கத்தின் நிதித் தேவை ஏலமிடல் முறை மற்றும் நேரடி விற்பனை முறையினைப் பயன்படுத்தி முறிகள் வழங்கப்பட்டமையின் மூலம் நிறைவேற்றப்பட்ட விதம் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 1 : முறிகள் வழங்கப்பட்ட ஒழுங்குமுறையும் பெறுமதியும் (2014 சனவரி – 2016 மே)

| ஆண்டும் மாதமும் | முறிகள் வழங்கப்பட்ட முறைகளும் பெறுமதியும் | | | வழங்கப்பட்ட பெறுமதியின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|
| | ஏலமிடல் முறை (Auction) | நேரடி முறை (Direct Placement) | மொத்தம் | ஏலமிடல் முறை (Auction) | நேரடி முறை (direct Placement) |
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | % | % |
| 2014 சனவரி | 5.500 | 32.718 | 38.218 | 14 | 86 |
| 2014 பெப்ரவரி | 3.050 | 80.088 | 83.138 | 4 | 96 |
| 2014 மார்ச் | 5.000 | 130.117 | 135.117 | 4 | 96 |
| 2014 ஏப்ரல் | - | 120.373 | 120.373 | 0 | 100 |
| 2014 மே | 5.950 | 62.745 | 68.695 | 9 | 91 |
| 2014 யூன் | - | 126.210 | 126.210 | 0 | 100 |
| 2014 யூலை | 5.300 | 109.483 | 114.783 | 5 | 95 |
| 2014 ஆகஸ்ட் | - | 44.230 | 44.230 | 0 | 100 |
| 2014 செப்தெம்பர் | 2.950 | 72.458 | 75.408 | 4 | 96 |
| 2014 ஒக்தோபர் | - | 22.617 | 22.617 | 0 | 100 |
| 2014 நவம்பர் | - | 13.788 | 13.788 | 0 | 100 |
| 2014 திசெம்பர் | 4.000 | 18.148 | 22.148 | 18 | 82 |
| 2015 சனவரி | - | 69.923 | 69.923 | 0 | 100 |
| 2015 பெப்ரவரி | 10.058 | 23.524 | 33.582 | 30 | 70 |
| 2015 மார்ச் | 171.659 | 14.144 | 185.803 | 92 | 8 |
| 2015 ஏப்ரல் | 44.306 | - | 44.306 | 100 | 0 |
| 2015 மே | 35.730 | - | 35.730 | 100 | 0 |
| 2015 யூன் | 82.900 | - | 82.900 | 100 | 0 |
| 2015 யூலை | 99.575 | - | 99.575 | 100 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 ஆகஸ்ட் | 100.578 | - | 100.578 | 100 | 0 |
| 2015 செப்தெம்பர் | 57.576 | - | 57.576 | 100 | 0 |
| 2015 ஒக்தோபர் | 55.811 | - | 55.811 | 100 | 0 |
| 2015 நவம்பர் | 20.594 | - | 20.594 | 100 | 0 |
| 2015 திசெம்பர் | 29.545 | - | 29.545 | 100 | 0 |
| 2016 சனவரி | 61.119 | - | 61.119 | 100 | 0 |
| 2016 பெப்ரவரி | 38.959 | - | 38.959 | 100 | 0 |
| 2016 மார்ச் | 135.667 | - | 135.667 | 100 | 0 |
| 2016 ஏப்ரல் | 30.44 | - | 30.440 | 100 | 0 |
| 2016 மே | 114.335 | - | 114.335 | 100 | 0 |

(2016 யூன் 29 ஆந் திகதிய விசேட கணக்காய்வு அறிக்கையினை தட்டச்சு செய்கையில் காணப்பட்ட இரண்டு பெறுமதிகள் திருத்தப்பட்டு மேற்குறிப்பிட்ட அட்டவணை நாளதுவரையாக்கப்பட்டது.)

எவ்வாறாயினும் 2015 பெரவரி 27 ஆந் திகதி வரை மேற்குறிப்பிட்ட இரண்டு முறைகளும் பின்பற்றப்பட்டிருந்த போதிலும், அன்றைய திகதி முதல் இலங்கை மத்திய வங்கியினால் தற்காலிகமாக நேரடி வழங்கல் முறையிலிருந்து விலகி முதலாந்தர ஏலமிடல் முறை மாத்திரம் பின்பற்றப்பட்டிருந்தது.

(மேற்படி பெறுமதி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 07 )

4.4 2014 சனவரி மாத்திலிருந்து நேரடி முறையினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் முழுமையாக செயற்பாட்டிலிருந்த 2015 ஏப்ரல் மாதம் வரையான 15 மாத காலத்தில், நேரடி முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும் ஏலமிடல் முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும் இந்த இரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அந்த 15 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த முறிகளில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவை நேரடி முறையினைப் பயன்படுத்தி வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளில் காண்பிக்கப்பட்டவாறு மத்திய வங்கியினால் மேற்படி பந்திக்கு வழங்கப்பட்டிருந்த எழுத்துமூல பதிலளித்தல் மற்றும் பொது முயற்சிகள் குழு பெற்றுக் கொண்ட வாய்மொழி சாட்சிய குறிப்புக்களின் படி மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 07 முதல் 24 வரை)

## 5. அவதானிப்புக்கள்

2015 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் எதிர்வரும் காலங்கள் தொடர்பில் திறைசேரி முறிகள் வழங்கப்பட்ட ஒழுங்குமுறை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் அவற்றின் பண்புகளிற்கமைய கீழ்வருமாறு மூன்று தலைப்புக்களின் கீழ் கணக்காய்வு அவதானிப்புக்களாக குறிப்பிடப்படுகின்றன.

(அ) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற முறிகளின் வழங்கல்

(ஆ) 2016 மார்ச் 29 ஆந் திகதி இடம்பெற்ற முறிகளின் வழங்கல்

(இ) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற முறிகளின் வழங்கலுக்குரிய முறைமாற்றப்பட்ட பின்னர் ஏற்பட்டிருந்த போக்குகள்

### 5.1 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற திறைசேரி முறிகளின் வழங்குதல்.

5.1.1 மத்திய வங்கியின் நாணயச் சபையின் MB/PD/05/18/97 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் படி (பின்னிணைப்பு xii) 1997 மார்ச் மாதம் முதல் திறைசேரி முறிகளை ஏல விற்பனை செய்வதன் மூலம் அவற்றை முதலாந்தர வணிகர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. சந்தையில் தேவையான அளவு நிதி காணப்படாத சந்தர்ப்பங்களில் அல்லது வட்டி வீதம் வரையறையற்று அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் ஏலமிடல் மூலம் பெற்றுக்கொள்ள முடியாத பணத்தினை பெற்றுக்கொள்வதற்காக ஊழியர் சேமலாப நிதியினை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அதில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆகையால் இலங்கை மத்திய வங்கியினால் வட்டி வீதத்தினை கட்டுப்படுத்தும் கருவியாக நேரடி முறையில் பணத்தினை பெற்றுக்கொள்ளுதல் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 25 முதல் 26 வரை)

5.1.2 அத்துடன் நாணயச் சபையின் MB/PD/1/26/2008 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்திலுள்ள (பின்னிணைப்பு xiii) விடயங்களை கருத்திற்கொண்ட பின்னர் மற்றும் அரசாங்க பிணைகளுடன் சம்பந்தப்பட்ட வட்டி வீதம் அதிகரித்தல் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையினால் 2008 ஆம் ஆண்டில் நேரடி முறையூடாக நிதித் தேவையினை பூர்த்திசெய்து கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், நாணயச் சபையின் MB/PD/25/20/2008 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் படி(பின்னிணைப்பு xiv) நாணயச் சபையினால் இரண்டாந்தரச் சந்தையில் நிலவுகின்ற வட்டிவீதத்தைக் காட்டிலும் ஏறத்தாழ 0.05 சதவீத (Five Basis Points) கூடிய வட்டி வீதத்தில் முறிகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கப்படுவதன் மூலம் சந்தையில் திரவத்தன்மையினை ஏற்படுத்துவதற்கு மேலும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பில் காட்டப்படுகின்ற வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 26 முதல் 39 வரை)

5.1.3 இலங்கை மத்திய வங்கியின் அரச பொதுப்படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகருக்கு முகவரியிடப்பட்டு பொதுத் திறைசேரியின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் (Treasury Operation Department) பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்டிருந்தTO/DG/CFS/03 ஆம் இலக்க 2015 பெப்ரவரி 20 ஆந் திகதிய கடிதத்துடன் (பின்னிணைப்புxv) 2015 மார்ச் மாதத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி தேவை ரூபா 172 பில்லியனாகும். அதில் 2015 மார்ச் 02 ஆந் திகதிக்காக மாத்திரம் தேவைப்பட்டிருந்த அரசின் நிதித் தேவை ரூபா 13.550 பில்லியனாக காணப்பட்டதுடன் இத் தேவையில் ரூபா 1 பில்லியன் தொகையினை முதலாந்தர ஏலத்தின் மூலமும் எஞ்சிய ரூபா 12.550 பில்லியன் தொகையினை நேரடி முறையின் மூலமும் பெற்றுக்கொள்வதன் ஊடாக அரசுக்குத் தேவையான

நிதியினை பெற்றுக்கொள்தல் பொருத்தமானது என உள்நாட்டு கடன் முகாமைத்துவச் சபை (DDMC) இனால் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 1300 மணிக்கு (பின்னிணைப்பு xvi) நடாத்தப்பட்டிருந்த கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. நிதி அமைச்சின் பிரதிநிதியொருவரையும் மத்திய வங்கியின் 04 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய குழுவின் பொறுப்பு யாதெனில் உள்நாட்டுக் கடன்பெறுதல் கிரயம் மற்றும் இடரை குறைக்கும் விதத்தில் இதனை பேணிச் செல்வதாகும். இருப்பினும், இதன்போது அவதானிக்கப்பட்ட மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில் இக் கூட்டத்திற்காக அந்த நிதி அமைச்சின் பிரதிநிதி சமூகமளித்திருக்காமையாகும். அவ்வாறான நிலைமையின் கீழ் அவ்வாறு சமூகமளித்திருக்காத உறுப்பினரின் இணக்கப்பாட்டை மாற்றுவழி முறையில் அதாவது தொலைபேசியினூடாகவேனும் பெற்றுக்கொண்டிருந்தமைக்கு தகவல்கள் காணப்படவில்லை. அதன்பின்னர், அதாவது 2015 மார்ச் 02 ஆந் திகதிய இத் தீர்மானத்திற்காக மத்திய வங்கி ஆளுநரின் அங்கீகாரமும் (பின்னிணைப்பு xvi) பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு, மத்திய வங்கியினால் மேற்படி பந்திக்கு வழங்கப்பட்டிருந்த எழுத்துமூல பதிலளித்தல், பொதுமுயற்சிகள் குழு பெற்றுக்கொண்ட வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 39 முதல் 48 வரை)

5.1.4 2015 மார்ச் மாதத்திற்காக திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை வழங்கி நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிதித் தேவையான ரூபா 261.683 பில்லியன் (இதில் ரூபா 89.683 பில்லியன் தொகையான ஆண்டின் போது மீளவும் வழங்கப்பட்டிருந்த திறைசேரி உண்டியல்களும் உள்ளடங்கியிருந்தது.) தொகைக்காக அரசாங்க கடன்படுதல் நிகழ்ச்சித்திட்டம் (Government Borrowing Programme) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 13.00 மணிக்கு நடாத்தப்பட்ட அரசாங்க கடன் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந் நிகழ்ச்சித்திட்டத்தின் படி அத்தகைய முழுமையான நிதித் தேவையில் ரூபா 89.683 பில்லியன் தொகையினை திறைசேரி உண்டியல்களின் மூலமும்,ரூபா 172 பில்லியன் தொகையினை திறைசேரி முறிகளின் மூலமும் பெற்றுக்கொள்வதற்கும், அந்த ரூபா 172 பில்லியனில் ரூபா 1 பில்லியனை திறைசேரி முறிகளை முதலாந்தர ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலமும், எஞ்சிய தொகையினை நேரடி முறையின் மூலமும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த அங்கீகாரத்தினை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் (SM) ஊடாக அரச படுகடன்அத்தியட்சகர் (Superintendent of Public Debt) இற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், (பின்னிணைப்பு xvi) அவ்விதம் அச் செயற்பாடு இடம்பெற்றிருக்காமை மார்ச் மாதத்தில் பூர்த்திசெய்து கொள்ளப்பட்டிருந்த ரூபா 185.802 பில்லியன் தொகையான மொத்த நிதியில் நேரடி முறை மூலம் ரூபா 14.143 பில்லியன் பூர்த்தி செய்து கொள்ளப்பட்டிருந்தமை (4.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி) காரணமாக அவதானிக்கப்பட்டது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 48 முதல் 51 வரை)

5.1.5 அவ்வாறே 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 30 ஆண்டுகளில் முதிர்வடையும் முறிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறான நீண்டகால முறிகளுக்காக சாதாரண முதலீட்டாளர்களின் பங்குபற்றலை இலங்கை மத்திய வங்கியினால் எதிர்பார்க்கப்பட்டிருக்காமையும் வட்டி விளைவு சுழற்சியினை 30 ஆண்டுகள் வரை நீடிப்புச் செய்திருந்தமையினால் இரண்டாந்தரச் சந்தையினுள் வெளிநாட்டு முதலீடாளர்களின் பங்குபற்றல் (பின்னிணைப்பு xviii) எதிர்பார்க்கப்பட்டிருந்தமையும் வெளிப்பட்டிருந்தது. இருப்பினும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மீள எடுத்துக்கொண்டிருந்தமை 2015 இன் வருடாந்த அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக அந்த எதிர்பார்ப்பு வெற்றியளித்திருந்ததா என்பது சிக்கலுக்குரியதாக காணப்பட்டது.(பின்னிணைப்பு xix)

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பில் காட்டப்படுகின்ற வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 51 முதல் 52 வரை)

5.1.6 இந்த முறிகள் வழங்கப்பட்ட திகதிக்கு முந்திய வாரத்தில் இரண்டாந்தர சந்தையினுள் 30 ஆண்டு முதிர்வுகாலம் கொண்ட முறிகளுக்காக 9.48 சதவீத சராசரி வருவாய் வீதமே காணப்பட்டதுடன் (பின்னணைப்பு xx) **<u>அந்த வீதாசாரத்திற்கு கிட்டிய விகிதாசாரங்களில் இந்த முறிகளின் வழங்கல் இடம்பெறும் என்ற எதிர்பார்ப்பு அரசாங்க படுகடன் திணைக்களத்திடம் காணப்பட்டதாக மத்திய வங்கி முறிகளின் வழங்கல் தொடர்பில் புலனாய்வு செய்வதற்காக பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவின் விசேட இணைந்த கணக்குகள் குழுவின் வாய்மொழிமூல சாட்சியமளித்தல் குறிப்புக்களை பரிசோதிக்கையில் வெளிப்பட்டது (பின்னிணைப்பு xxi). அவ்வாறு எதிர்பாக்கப்பட்ட விளைவு வீதத்துடன் வட்டத்துடன் முறிகளை விற்பனை செய்வதற்கு மேலதிகமாக</u>** மேற்படி 4.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு அரசாங்கத்திற்கு அதிகளவு தொகையினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் காணப்பட்டிருந்தது. அதன் படி 2015 பெப்ரவரி 25 மற்றும் 26 ஆந் திகதிகளில் முறையே இணையதளத்திலும் செய்திப் பத்திரிகைளிலும் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தல்களின் படி முதலாந்தர 16 வணிகர்களிற்கும் 30 ஆண்டுகளில் முதிர்வடைகின்ற ரூபா 1 பில்லியன் திறைசேரி முறிகள் 12.5 சதவீத வட்டியின் கீழ் வழங்கப்படுவதற்காக கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. (பின்னிணைப்பு xxii)

இது தொடர்பான கூறுவிலைகளின் கிடைப்பனவு தகவல்கள் அறிக்கையினை (பின்னிணைப்பு xxiii) பரிசோதித்ததில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் முதலாந்தர 16 வணிகர்களால் ரூபா 20.708 பில்லியன் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் அந்த தொகையில் ஏறத்தாழ 75 சதவீதமளவு அதாவது ரூபா 15.531 பில்லியன் தொகை ஒரு தனியார் முதலாந்தர வணிகரினாலும் அவருக்காக மற்றொரு முதலாந்தர வணிகரான இலங்கை வங்கியின் ஊடாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இருப்பினும் மேற்படி பந்தியில் கோடிடப்பட்ட வாக்கியத்தில் காட்டப்பட்டுள்ள விடயம் தொடர்பில் 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் மீண்டும் விசாரணை செய்யப்படாதிருந்ததுடன், ஆகையால் அவ்விடயம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மேற்படி வாக்கியத்தினை தேவையாயின் பந்தியிலிருந்து அகற்றலாம். அவ்வாறு அகற்றப்படினும், அதன் காரணமாக விசேட கணக்காய்வு அறிக்கையிலுள்ள முடிவுரைக்கு எவ்வித தாக்கமும் ஏற்பட மாட்டாது.)

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பில் காட்டப்படுகின்ற வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 52 முதல் 54 வரை)

5.1.7 உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையினால் முதலாந்தர ஏலத்தில் வழங்குவதற்கு ரூபா 1 பில்லியன் முறிகள் மாத்திரமே பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த பெறுமதியிலும் பத்து மடங்குகளிற்கும் கூடிய தொகையான ரூபா 10.058 பில்லியன் வரை கூறுவிலைகளை ஏற்றுக்கொள்ளவதற்கு, 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி ஏலம் நடாத்தப்பட்ட பின்னர் 12.30 மணி முதல் 13.10 மணி வரை இடம்பெற்றிருந்த 2/2015 ஆம் இலக்கதிறைசேரி முறிகள் கேள்விச் சபையினால் (Treasury Bond Tender Committee) தீர்மானிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு xxiv) இதன்போது அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயம் யாதெனில் மேற்படி தீர்மானம் ஏலம் இடம்பெற்ற பின்னரே எடுக்கப்பட்டிருந்தமையாகும். இது மேற்படி 5.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையினால் ரூபா 12.550 பில்லியன் தொகையினை நேரடி முறையின் மூலம் பூர்த்திசெய்துகொள்வதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தினை முழுமையாக மீறுவதாகும். அந்த நிலையின் கீழ் அன்றைய தினம் இடம்பெற்றிருந்த ஏலத்தில் 9.3510 முதல் 11.7270 வரை நிறையிடப்பட்ட திரும்பல் வீதத்திற்கு கூறு விலையினைச் சமர்ப்பித்திருந்த 14 முதலாந்தர வணிகர்களிற்கு 30 ஆண்டுகளில் முதிர்வடைகின்ற திறைசேரி முறிகளை வழங்குவதன் ஊடாக (பின்னிணைப்பு xxv) ரூபா 10.058 பில்லியன் தொகையினை திரட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், கழிவு வீதத்தில் (குறைவான விலையில்) வழங்கியிருந்தமை காரணமாக ஏறத்தாழ ரூபா 9.658 பில்லியன் தொகையினை திரட்டுவதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது. இதன்போது அவதானிக்கப்பட்ட மேலுமொரு முக்கியமான விடயம் யாதெனில் மேற்குறித்தவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாது போயிருந்த ரூபா 0.371 பில்லியன் (ரூபா 10.058 பில்லியன் - ரூபா 9.687 பில்லியன்) தொகையினை ஏனைய குறுங்கால மூலங்களிலிருந்து பூர்த்திசெய்ய வேண்டியேற்பட்டிருந்ததமையாகும்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பில் காட்டப்படுகின்ற வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 54 முதல் 111 வரை)

5.1.8 மேற்குறித்த பந்தியிலுள்ள விடயங்களின் படி 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 08.30 மணி முதல் 11.00 மணி வரை இடம்பெற்ற ஏலமிடல் சந்தர்ப்பம் வரை அந்த ஏலத்திலிருந்து 2015 மார்ச் 02 ஆந் திகதியன்று தேவையாயிருந்த ரூபா 13.550 பில்லியன் காசுத் தேவை அடங்கலான 2015 மார்ச் மாதத்திற்குரிய காசுத் தேவையினையும் உள்ளடக்கிய உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையின் பரிந்துரையும் மத்திய வங்கி ஆளுநரின் அங்கீகாரமும் அதாவது ஏலமிடல் முடிவடைந்து கேள்விச் சபையின் தீர்மானத்தை பெற்றுக்கொண்ட பின்னரும் கூட உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையின் கடன்பெறுதல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கீழேயுள்ள தொடர்பில் காட்டப்பட்டுள்ள விடயத்தின் பிரகாரம், பந்தியின் மேற்குறித்த அவதானிப்புக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்டிருந்த எழுத்துமூல பதிலளித்தல் மற்றும் பொது முயற்சிகள் குழு பெற்றுக்கொண்ட வாய்மொழி சாட்சிய குறிப்புக்களின் படி மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் மாற்றமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 55 முதல் 111 வரை)

மேற்குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விச் சபையின் தீர்மானம் மத்திய வங்கியின் ஆளுநரினால் அரச பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த அறிவுறுத்தலின் பிரகாரம் (அந்த அறிவுறுத்தலின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது) எடுக்கப்பட்டதாகும் என்பது அரச பொதுப்படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகரால் விலைகோரல் பொழிப்பு அறிக்கையில் (Bid Summary Report) கையெழுத்தில் (பின்னிணைப்பு xxvi) குறிப்பிடப்பட்டிருந்தது. **(அக் குறிப்பு தன்னால் எழுதப்பட்டதாக (பின்னிணைப்பு xxvii) அந்த அத்தியட்சகரினால் வாய்மொழிமூல சாட்சியமளித்தலின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது).** மேற்குறிப்பிட்ட குறிப்புக்கு மேலதிகமாக அந்த முறிகள் ஏலவிற்பனையிலிருந்து ரூபா 10.058 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் வேறு எதுவித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேற்குறித்த எழுத்துமூல சாட்சியமளித்தலின் பிரித்தெடுத்தலும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் கீழே தரப்பட்டுள்ளன.

"Governor instructed to raise funds up to Rs. 10 billion taking into consideration additionalfund requirement of the Government" (பின்னிணைப்பு xxvii)

*''அரசாங்கத்தின் மேலதிக நிதித் தேவையினைக் கருத்திற்கொண்ட பின்னர் ரூபா 10 பில்லியன் வரையான நிதியினை பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியின் ஆளுனரினால் அறிவுறுத்தல் தரப்பட்டிருந்தது''*

(மேற்படி அவதானிப்புக்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிராததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளில் காட்டப்படுகின்ற 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் பெற்றுக்கொண்ட வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி அவதானிப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 55 முதல் 111 வரை)

5.1.9 மேலும், முதலாந்தர கொடுக்கல் வாங்கல் செய்வோர் சமர்ப்பித்திருந்த கூறுவிலைகள், தொழிற்பாட்டு கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறையின் படி பல்வேறு பகுப்பாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் தயாரிக்கப்பட்ட 07 பல்வேறு மாற்றுவழிகளிலிருந்து (Option) 05 ஆவது மாற்றுவழிச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளல் பொருத்தமானது என்றும், ரூபா 2.608 பில்லியன் தொகையினை ஏலத்திலிருந்து ஈட்டிக்கொள்ளுமாறும் திறைசேரி முறிகள் கேள்விச் சபைக்கு அரச படுகடன் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு xxvi)

(மேற்படி அவதானிப்பு தொடர்பில் மத்தியவங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 2.608 பில்லியன் ஏலமிடலிலிருந்து பெற்றுக்கொள்தல் பொருத்தமானது என பரிந்துரைசெய்யப்பட்டு பொதுபடுகடன் திணைக்களத்தினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச் சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியின் ஆளுநரால் ரூபா 20 பில்லியன் தொகை ஏலமிடலிருந்து பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கவில்லை என வாய்மொழி சாட்சியமளித்தல் குறிப்பிலிருந்து (தொடர்பு: ………….. இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி) வெளிப்பட்டிருந்தது. அவ்வாறு ரூபா 20 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு பொதுபடுகடன் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தமது விருப்பமின்மையை தெரிவித்ததாகவும், அதற்கமைய ரூபா 10 பில்லியன் தொகையினை ஏலமிடலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு மத்திய வங்கியின் ஆளுனரால் தெரிவித்திருந்தற்கமைய அதற்கான அறிக்கையொன்று பொதுபடுகடன் திணைக்களத்தின் Front Office இனால் கேள்விச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.
அதன் படி, விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கோடிடப்பட்டுள்ள பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி என நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். "பரிந்துரை செய்து சமர்ப்பிப்பதற்காக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது")

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 111 முதல் 114 வரை)

5.1.10 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 11.10 மணிக்கு நடாதத்ப்பட்ட ஏலமிடல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய 2015 மார்ச் மாதத்திற்கான கடன்படுதல் நிகழ்ச்சித்திட்டம் அன்றைய தினம் 13.00 மணிக்கு இடம்பெற்ற (பின்னிணைப்பு xvi) உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. வீதாசாரங்களை நிலையானதாக்குவதற்கு ஊழியர் சேமலாப நிதியம் (EPF), தேசிய சேமிப்பு வங்கி நிதிகள் முகாமைத்துவக் கம்பனி **(NSB)** மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் **(SLIC)** ஆகியவற்றுக்கு முறிகளை வழங்குவதற்கு விசாரித்தறியுமாறான கருத்தினை வழங்கும் குறிப்பொன்றையும் 20, 30 மற்றும் 50 ஆண்டுகள் என்ற அடிப்படையில் ஒரு வகையிலான ரூபா 10 பில்லியன் வீதமான ரூபா 40 பில்லியன் முறிகளை வழங்கி நிதியினை சேகரித்துக்கொள்ளும் படியான குறிப்பொன்றையும் எழுதி (பின்னிணைப்பு xvi) 2015 மார்ச் மாதத்திற்கான கடன் பெறுதல் நிகழ்ச்சித்திட்டத்தினுள் நேரடி முறையின் ஊடாக திறைசேறி முறிகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநரினால் 2015 மார்ச் 02 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்போது நேரடி முறையினைக் கைவிடுவது தொடர்பில் எந்தவொரு விடயமும் அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அந்த இரு குறிப்புக்களும் (அ) மற்றும் (ஆ) என்ற வகையில் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) “Raise Rs. 40 bn through issue of 20, 30, 50 years of T-Bonds, 10 bn each

(ஆ) “EPF/NSB/SLIC to be asked to stabilize rates”

(எவ்வாறாயினும், மத்திய வங்கியின் ஆளுநரால் 50 ஆண்டுகளின் பின்னர் முதிர்வடையும் முறிகளை வழங்குமாறு மேலேயுள்ள (அ) இல் காட்டப்பட்டுள்ள குறிப்பில் காணப்பட்ட போதிலும், இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 30 ஆண்டுகளிற்கு மேற்பட்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுக்களின் மொத்தம் ரூபா 40 பில்லியன் அல்ல என்பதும் அவதானிக்கப்பட்டது.)

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிராமையாலும், பந்தியில் (அ) மற்றும் (ஆ) என காட்டப்பட்டுள்ள எழுத்து மூல குறிப்புக்களுடன் கூடிய பதிவேடுகள், சான்றுகளாக உள்ளமையாலும் ஏனைய தகவல்கள் மூலம் அந்த பந்தி தொடர்பில் கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 114 முதல் 115 வரை)

5.1.11 மேலேயுள்ள 5.1.10 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு ரூபா 40 பில்லியன் நிதித் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக நீண்டகால முதிர்வினைக் கொண்ட முறிகளை நேரடி முறையில் வழங்குவதற்கு மத்திய வங்கி ஆளுநரினால் 2015 மார்ச் 02 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், (பின்னணைப்பு xvi) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் மார்ச் 06 ஆந் திகதி வரையான காலத்தினுள் இடம்பெற்றிருந்த நிகழ்வுகள் அந்த பரிந்துரைகளுடன் இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதாவது தேவையான முழுத் தொகையும் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற ஏலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது திறைசேரி முறிகள் கேள்விச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 மார்ச் 06 ஆந் திகதி வரை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நேரடி முறையினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2015 மார்ச் 06 ஆந் திகதிய MB/ER/5/3/2015 ஆம் இலக்க நாணயச்சபை விஞ்ஞாபனத்தின் (பின்னிணைப்பு xxviii) படி இலங்கை மத்திய வங்கியினால் திறிசேரி முறிகளை வழங்குகையில் பயன்படுத்துகின்ற நேரடி முறையினை தற்காலிகமாக இடைநிறுத்துதல் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரினால் நாணயச் சபைக்கு **அறிவுறுத்தப்பட்டிருந்ததன் பிரகாரம் அது அன்றைய தினமே தாமதிக்காது (Ratification) அனுமதிக்கப்பட்டிருந்தது.** மேலும், 2015 பெப்ரவரி 23 ஆந் திகதிய நாணயச் சபையின் கூட்டக் குறிப்பின் படி (பின்னிணைப்பு xviii) நாணயச் சபையினால் அந்த வாரத்தினுள் 30 ஆண்டுகள் முதிர்வுக் காலத்தினைக் கொண்ட திறைசேரி முறிகளின் ஏலமிடல் ஒன்று நடாத்தப்படுதல் வேண்டுமென அரச பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தமை தவிர நேரடி முறையிலிருந்து விலகி முதலாந்தர ஏலமிடல் முறையினை பயன்படுத்தவதற்காக எந்தவொரு தீர்மானமும் நாணயச் சபையினால் எடுக்கப்பட்டிருந்தமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேற்படி பந்தி தொடர்பில் மத்திய வங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நேரடி முறை தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமை தொடர்பில் அங்கீகாரம் கிடைத்திருந்தாக 2016 யூன் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த விட்டுவிடலிற்காக அங்கீகாரம் காணப்படாமை வாய்மொழி குறிப்பின் மூலம் உறுதியாகியுள்ளது. மேலும், அவ்வாறான தீர்மானமொன்று நாணயச் சபையில் கலந்துரையாடப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், மேற்படி பந்தியிலுள்ள கோடிடப்பட்ட வசனம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வசனம் நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**“அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதத்தினை மாற்றுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு உடனடி அங்கீகாரமொன்றை பெற்றுக்கொள்ளல் அன்றி நேரடி முறையினை கைவிடுவதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.”**

(மேற்படி அவதானிப்புக்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிராததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளில் காட்டப்படுகின்ற 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் பெற்றுக்கொண்ட வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி அவதானிப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 115 முதல் 152 வரை)

5.1.12 உள்நாட்டு கடன் முகாமைத்துவ சபையினால் முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த விதத்தில் முறிகளின் ஏலவிற்பனையை ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் அந்த ஏலத்தின் போது பெறப்பட்டிருந்த கூறு விலைகளை குறைவாக நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதத்திலிருந்து உயர்வாக நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் வரை வகைப்படுத்திய பின்னர் கீழே காட்டப்பட்டுள்ள 7 முதலாந்தர வணிகர்களின் நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் 10.4652 இற்கு ரூபா 01 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும் என்பது மாத்திரமன்றி அரசாங்கத்திற்கு ரூபா 1.403 வரையான நிதியினையும் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் மேலே 5.1.7 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் 11.7270 வரை அதிகரித்திருக்க மாட்டாது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 153 )

5.1.13 மேற்குறித்த நிலைமை விலைகோரல் தகவல்கள் படிவங்களுக்கு (Bid acceptance Information Sheet) அமைவாக தயாரிக்கப்பட்ட (பின்னிணைப்பு xxv) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (மேற்படி 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத் தன்மையினை பாதுகாக்கும் நோக்கில் முதலாந்தர வணிகர்களின் தனித்துவங்கள் வெளிப்படுத்தப்படாதவாறு வணிகர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.)

அட்டவணை 2: முதலாவது கூறுவிலைகள் ஏழு இற்கு உரிய தரவுகள்

| தொடர் இல. | வணிகர் (Dealer) | முறிகளின் முகப் பெறுமதி ரூபா. | ஏலமிடலிருந்து கிடைத்த தொகை ரூபா. | நிறையளிக்கப்பட்ட சராசரி திரும்பல் வீதம் (WAYR) |
|---|---|---|---|---|
| 1 | **B நிறுவனம்** | 8,000,000 | 9,546,736 | 9.3510 |
| 2 | **A நிறுவனம்** | 50,000,000 | 56,005,000 | 9.9063 |
| 3 | **F நிறுவனம்** | 100,000,000 | 110,954,800 | 10.0278 |
| 4 | **B நிறுவனம்** | 500,000,000 | 546,966,000 | 10.1970 |
| 5 | **E நிறுவனம்** | 50,000,000 | 52,253,650 | 10.2339 |
| 6 | **H நிறுவனம்** | 100,000,000 | 104,507,300 | 10.2959 |
| 7 | **EPF** | 500,000,000 | 522,536,500 | 10.4652 |
| | **மொத்தம்** | **1,308,000,000** | **1,402,769,986** | |

மேலும், மேலே குறிப்பிடப்பட்டவாறு முதலாந்தர ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தியிருப்பின் மேற்குறிப்பிட்ட முதலாந்தர 7 வணிகர்கள் தவிர்ந்த அத்திகதியில் கிடைத்திருந்த ரூபா 20.708 பில்லியன் மொத்தமான எல்லாக் கூறுவிலைகளினதும் சமர்ப்பித்தலிருந்து 75 சதவீதமான அளவுக்காக கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்த கீழே 5.1.15 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள K நிறுவனம் உள்ளிட்ட ஏனைய முதலாந்தர வணிகர்களிற்கு முறிகளை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் காணப்படாதிருந்தமை மேற்படி அட்டவணையிலிருந்து தெளிவாகின்றது. அன்றைய தினம் ஏலத்தின் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1 பில்லியன் தொகையினை ரூபா 10.058 பில்லியன் வரை அதிகரிப்பதற்கு தீமானிக்கப்பட்டிருந்தமை காரணமாக மேற்குறிப்பிட்ட 07 கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோருக்கு இடையில் காணப்பட்டிருக்காத K நிறுவனத்திற்கு அன்றைய தினம் வழங்கப்பட்டிருந்த மொத்த முறிகளின் பெறுமதியில் 50 சதவீதம் அல்லது ரூபா 5 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கான (பின்னிணைப்பு XXV) சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன்போது அந்த ரூபா 5 பில்லியனில் ரூபா 2 பில்லியனை நேரடியாகவும் ரூபா 3 பில்லியனை முதலாந்தர வணிகரான இலங்கை வங்கியின் ஊடாக மறைமுகமாகப் பெற்றுக்கொள்வதற்கும் அந்த நடவடிக்கை எடுத்திருந்தது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித

மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 153 முதல் 154 வரை)

5.1.14 மேற்படி முறிகளை வழங்குகையில் இடம்பெற்றிருந்த மற்றொரு முக்கியமான விடயம் என்னவெனில் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற மற்றும் முதலாந்தர ஏலத்தில் முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு முடியுமான நிறுவனமொன்றான ஊழியர் சேமலாப நிதியம் உயர்வான வருவாய் வீதத்துடன் முதலாந்தர சந்தையிலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த அளவில் முறிகளைப் பெற்றுக்கொண்டு (பின்னிணைப்பு xxix) குறைந்த வருவாய் வீதத்துடன் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்திருந்தமை காரணமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த நிதிசார் அனுகூலத்தை இழந்திருந்தமையாகும்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 154 முதல் 155 வரை)

5.1.15 மேற்படி 5.1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2015 மார்ச் 02 ஆந் திகதிக்கான அரசாங்க கடன் தவணைப்பணத்தினை தீர்ப்பதற்குத் தேவையான பணத்தின் அளவினை நிச்சயித்துக் குறிப்பிட்டு 2015 மார்ச் மாத்திற்காக திறைசேரியின் ஒட்டுமொத்த நிதித்தேவை 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி இலங்கை மத்திய வங்கிக்கு கிடைத்திருந்தமையால் பொருத்தமான உபாயவழி முறையொன்றை பயன்படுத்தி அந்த நிதியினை பெற்றுக்கொள்வதற்காக போதியளவு கால அவகாசம் மத்திய வங்கிக்கு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அதற்கமைய தேவையற்ற விதத்தில் கழிவினை வழங்காதும் சந்தை வட்டி வீதம் உயர்வடைவதற்கு சந்தர்ப்பத்தினை உருவாக்காதும் தேவையான நிதியினை பெற்றுக்கொள்வதற்காக தேவைப்படின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்று வழிகளை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பம் மத்திய வங்கிக்கு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) மக்கள் வங்கியினாலும் இலங்கை வங்கியனாலும் இதுவரை வழங்கப்பட்டுள்ள மேலதிகப்பற்று வசதியினை பயன்படுத்தி பின்னர் குறுங்கால முதிர்வுகொண்ட திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலம் அந்த மேலதிகப் பற்றுக்களை தீர்வுசெய்தல்.

(ii) ஊழியர் சேமலாப நிதியத்தில் மேலதிக நிதி காணப்படுமாயின் நேரடி முறையின் கீழ்அந்த நிதியத்திலிருந்து நிதியினை பெற்றுக்கொள்ளல்.

2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை நேரடி முறையின் ஊடாக ரூபா 3 பில்லியனுக்கு கிட்டிய தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் 02 ஆந் திகதியளவில் காணப்பட்ட எஞ்சிய நிதித் தேவையினையும் நேரடி முறையின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமைக்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்படாமையால் அவ்வாறு நிதியினை சேகரித்துக்கொள்ளல். (1997 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டிருந்த நேரடி முறையின் மூலம் முறிகளை வழங்குதல் தோல்வியடைந்திருந்தமை அவதானிக்கப்படாதிருந்ததுடன் தொடர்ந்தும் தேவையாகவுள்ள நிதியினை நேரடி முறையின் மூலம் பெற்றுக்கொள்ளல்).

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 155 முதல் 156 வரை)

5.1.16 இக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டமை காரணமாக அது ஐயத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் என்பது அவதானிக்கப்பட்டது.

(i) ஏலத்தினை முடிப்பதற்கு மிகவும் கிட்டிய காலத்தினுள் அதாவது இறுதியான 08 நிமிடங்களில் மொத்த கூறுவிலைப் பெறுமதியான ரூபா 20.708 பில்லியனில் ரூபா 13.60 பில்லியனுக்கு கூறுவிலைகள் கிடைத்திருந்தமை.

(ii) மேற்குறிப்பிட்ட ரூபா 13.60 பில்லியன் பெறுமதியில் ரூபா 13.00 பில்லியன் தொகை Kநிறுவனத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை.

(iii) ரூபா 01 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளிற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கையில் ரூபா 10.058 பில்லியன் வரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை.

(iv) K என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முதலாந்தர வணிகர் சார்பாக இலங்கை வங்கி ரூபா 13 பில்லியன் பெறுமதியான முறிகளிற்காக கூறுவிலையினைச் சமர்ப்பித்திருந்தமை மற்றும் அவ்வாறு முதலாந்தர வணிகர் ஒருவர் சார்பாக மற்றுமோர் முதலாந்தர வணிகர் கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்த முதலாவது சந்தர்ப்பமாக இது காணப்பட்டமை.

(v) ரூபா 01 பில்லியன் பெறுமதிக்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கையில் K நிறுவனத்தினால் ரூபா 2 பில்லியனுக்கு நேரடியாகவும் ரூபா 13 பில்லியனுக்கு இலங்கை வங்கியின் ஊடாகவும் மொத்தமாக ரூபா 15 பில்லியனுக்காக கூறுவிலையினைச் சமர்ப்பித்திருந்தமை மற்றும் அவ்வாறு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த பெறுமதியினைக் காட்டிலும் 15 மடங்கு முறிகளின் அளவுக்கு கூறுவலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அசாதாரண நிலைமையாக காணப்பட்டமை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 156 முதல் 157 வரை)

5.1.17 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி முறிகளை வழங்குவதற்கு முடிந்திருந்த மூன்று மாற்று வழிகளும் அவற்றின் மதிப்பிடப்பட்ட அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களும் வெவ்வேறாக கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி முறிகளை வழங்குதல் எதிர்பார்க்கப்பட்டவாறு ரூபா 01 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருப்பின் அப் பெறுமதியினை உள்ளடக்கும் விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கூறுவிலைகளிற்கு ஏற்ப பிணைமுறியொன்றின் கூறுவிலைப் பெறுமதியான ரூபா 104.5073 வரை மாத்திரம் முறிகள் வழங்கப்பட்டிருப்பின் ரூபா 1,403 மில்லியன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு முடிந்திருக்கும். அவ்வாறு அப் பெறுமதிக்கு முறிகளை வழங்குதல் வரையறுக்கப்பட்டிருக்காமை காரணமாக கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டவாறு அரசாங்கத்திற்கு ரூபா 889 மில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது.

அட்டவணை 3 : ரூபா 1 பில்லியனுக்கு வரையறுக்கத் தவறியமையால் மதிப்பிடப்பட்ட நட்டம்

| தொடர் இல. | வணிகர்கள் | கூறுவிலை<br>ரூபா. | முறியின் முகப்பெறுமதி (அரசாங்கத்தின் பொறுப்பு)<br>ரூபா. | செலுத்த வேண்டிய<br>ரூபா. | நட்டம்<br>ரூபா. |
|---|---|---|---|---|---|
| **7** | **ஊழியர் சேமலாப நிதியம்** | **104.507** | **500,000,000.00** | **1,402,769,986.00** | **-** |
| 8 | E | 103.116 | 50,000,000.00 | 1,454,327,886.00 | 695,750.00 |
| 9 | J | 102.207 | 100,000,000.00 | 1,556,535,086.00 | 2,300,100.00 |
| 10 | H | 102.207 | 100,000,000.00 | 1,658,742,286.00 | 2,300,100.00 |
| 11 | ஊழியர் சேமலாப நிதியம் | 102.207 | 1,000,000,000.00 | 2,680,814,286.00 | 23,001,000.00 |
| 12 | G | 102.207 | 50,000,000.00 | 2,731,917,786.00 | 1,150,150.00 |
| 13 | H | 101.758 | 100,000,000.00 | 2,833,675,786.00 | 2,749,300.00 |
| 14 | G | 99.999 | 50,000,000.00 | 2,883,675,286.00 | 2,254,150.00 |
| 15 | ஊழியர் சேமலாப நிதியம் | 99.999 | 500,000,000.00 | 3,383,670,286.00 | 22,541,500.00 |
| 16 | K | 97.878 | 250,000,000.00 | 3,628,365,286.00 | 16,573,250.00 |
| 17 | K | 95.8394 | 250,000,000.00 | 3,867,963,786.00 | 21,669,750.00 |
| 18 | M | 95.8074 | 1,250,000,000.00 | 5,065,556,286.00 | 108,748,750.00 |
| 19 | P | 93.879 | 50,000,000.00 | 5,112,495,786.00 | 5,314,150.00 |
| 20 | K | 93.879 | 500,000,000.00 | 5,581,890,786.00 | 53,141,500.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | K | 91.9928 | 1,000,000,000.00 | 6,501,818,786.00 | 125,145,000.00 |
| 22 | P | 90.177 | 50,000,000.00 | 6,546,907,286.00 | 7,165,150.00 |
| 23 | N | 90.177 | 100,000,000.00 | 6,637,084,286.00 | 14,330,300.00 |
| 24 | I | 90.177 | 250,000,000.00 | 6,862,526,786.00 | 35,825,750.00 |
| 25 | C | 90.1769 | 100,000,000.00 | 6,952,703,686.00 | 14,330,400.00 |
| 26 | B | 90.1699 | 3,000,000,000.00 | 9,657,800,686.00 | 430,122,000.00 |
| | **மொத்தம்** | | | | **889,358,050.00** |

(ii) அரசாங்க பொதுபடுகடன் திணைக்களத்தினால் கேள்விச் சபைக்கு வழங்கிய மாற்றுவழிகளைக் காட்டும் படிவத்தில் (Option Sheet) பரிந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 2.608 பில்லியன் முறிகளை (முறியொன்றின் கூறுவிலைப் பெறுமதி ரூபா 102.20720 என்ற வீதத்தில்) வழங்குவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது. அவ்வாறு செய்யாது ரூபா 10.058 பில்லியன் வரை முறிகள் வழங்கப்பட்டமை காரணமாக அரசாங்கத்திற்கு கீழேயுள்ள அட்டவணையில் கணிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 0.688 பில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது.

அட்டவணை இல. 4 : பரிந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 2.608 பில்லியனிற்கு மேற்பட்டமையால் நேர்ந்த நட்டம்

| **தொடர் இல.** | **வணிகர்கள்** | **கேள்வி மனு விலை ரூபா.** | **முறியின் முகப்பெறுமதி (அரசாங்கத்தின் பொறுப்பு) ரூபா.** | **செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா.** | **நட்டம் ரூபா.** |
|---|---|---|---|---|---|
| **12** | **G** | **102.21** | **50,000,000.00** | **2,731,917,786.00** | - |
| 13 | H | 101.76 | 100,000,000.00 | 2,833,675,786.00 | 449,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | G | 100.00 | 50,000,000.00 | 2,883,675,286.00 | 1,104,000.00 |
| 15 | ஊழியர் சேமலாப நிதியம் | 100.00 | 500,000,000.00 | 3,383,670,286.00 | 11,040,000.00 |
| 16 | K | 97.88 | 250,000,000.00 | 3,628,365,286.00 | 10,822,500.00 |
| 17 | K | 95.84 | 250,000,000.00 | 3,867,963,786.00 | 15,919,000.00 |
| 18 | M | 95.81 | 1,250,000,000.00 | 5,065,556,286.00 | 79,995,000.00 |
| 19 | P | 93.88 | 50,000,000.00 | 5,112,495,786.00 | 4,164,000.00 |
| 20 | K | 93.88 | 500,000,000.00 | 5,581,890,786.00 | 41,640,000.00 |
| 21 | K | 91.99 | 1,000,000,000.00 | 6,501,818,786.00 | 102,142,000.00 |
| 22 | P | 90.18 | 50,000,000.00 | 6,546,907,286.00 | 6,015,000.00 |
| 23 | N | 90.18 | 100,000,000.00 | 6,637,084,286.00 | 12,030,000.00 |
| 24 | I | 90.18 | 250,000,000.00 | 6,862,526,786.00 | 30,075,000.00 |
| 25 | C | 90.18 | 100,000,000.00 | 6,952,703,686.00 | 12,030,100.00 |
| 26 | B | 90.17 | 3,000,000,000.00 | 9,657,800,686.00 | 361,113,000.00 |
| | **மொத்தம்** | | | | **688,538,600.00** |

(iii) மேலும் முறி வழங்கல் ரூபா 1 பில்லியனுக்கு வரையறுக்கப்படாது இவ் அறிக்கையின் 5.1.18(ii) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு மத்திய வங்கி ஆளுநர் பரிந்துரைத்த ரூபா 20 பில்லியன் முறி விநியோகிக்கப்பட்டிருப்பின் பின்வரும் அட்டவணையில் கணிப்பிடப்பட்டவாறு ரூபா 2.730 பில்லியன் தொகையான மதிப்பீட்டு நட்டம் அரசாங்கத்திற்கு நேர்ந்திருக்கும்.

அட்டவணை 5- மத்திய வங்கி ஆளுநரின் பரிந்துரை அமுலாக்கப்பட்டிருப்பின் மதிப்பிடப்பட்ட நட்டம்.

| தொடர் இல. | வணிகர்கள் | கேள்வி மனு விலை ரூபா | முறியின் முகப்பெறுமதி (அரசாங்கத்தின் பொறுப்பு) ரூபா | செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா | நட்டம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **7** | **ஊழியர் சேமலாப நிதியம்** | **104.5073** | **500,000,000** | **1,402,769,986** | **-** |
| 8 | E | 103.1158 | 50,000,000 | 1,454,327,886 | 695,750 |
| 9 | J | 102.2072 | 100,000,000 | 1,556,535,086 | 2,300,100 |
| 10 | H | 102.2072 | 100,000,000 | 1,658,742,286 | 2,300,100 |
| 11 | **ஊழியர் சேமலாப நிதியம்** | 102.2072 | 1,000,000,000 | 2,680,814,286 | 23,001,000 |
| 12 | G | 102.207 | 50,000,000 | 2,731,917,786 | 1,150,150 |
| 13 | H | 101.758 | 100,000,000 | 2,833,675,786 | 2,749,300 |
| 14 | G | 99.999 | 50,000,000 | 2,883,675,286 | 2,254,150 |
| 15 | **ஊழியர் சேமலாப நிதியம** | 99.999 | 500,000,000 | 3,383,670,286 | 22,541,500 |
| 16 | K | 97.878 | 250,000,000 | 3,628,365,286 | 16,573,250 |
| 17 | K | 95.8394 | 250,000,000 | 3,867,963,786 | 21,669,750 |
| 18 | M | 95.8074 | 1,250,000,000 | 5,065,556,286 | 108,748,750 |
| 19 | P | 93.879 | 50,000,000 | 5,112,495,786 | 5,314,150 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | K | 93.879 | 500,000,000 | 5,581,890,786 | 53,141,500 |
| 21 | K | 91.9928 | 1,000,000,000 | 6,501,818,786 | 125,145,000 |
| 22 | P | 90.177 | 50,000,000 | 6,546,907,286 | 7,165,150 |
| 23 | N | 90.177 | 100,000,000 | 6,637,084,286 | 14,330,300 |
| 24 | I | 90.177 | 250,000,000 | 6,862,526,786 | 35,825,750 |
| 25 | C | 90.1769 | 100,000,000 | 6,952,703,686 | 14,330,400 |
| 26 | B | 90.1699 | 3,000,000,000 | 9,657,800,686 | 430,122,000 |
| 27 | I | 88.428 | 150,000,000 | 9,790,442,686 | 24,118,950 |
| 28 | B | 88.4074 | 5,000,000,000 | 14,210,812,686 | 804,995,000 |
| 29 | B | 86.769 | 5,000,000,000 | 18,549,262,686 | 886,915,000 |
| 30 | D | 86.7428 | 50,000,000 | 18,592,634,086 | 8,882,250 |
| 31 | I | 86.7425 | 100,000,000 | 18,679,376,586 | 17,764,800 |
| 32 | A | 86.74 | 100,000,000 | 18,766,116,586 | 17,767,300 |
| 33 | D | 86.0851 | 50,000,000 | 18,809,159,136 | 9,211,100 |
| 34 | O | 76.4803 | 50,000,000 | 18,847,399,286 | 14,013,500 |
| 35 | O | 74.2125 | 50,000,000 | 18,884,505,536 | 15,147,400 |
| 36 | L | 62.6216 | 100,000,000 | 18,947,127,136 | 41,885,700 |
| | **மொத்தம்** | | | | **2,730,059,050** |

(2016 யூன் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி அட்டவணையில் ''செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி'' நிரலில் இருந்த தட்டச்சு வழுக்களை திருத்தி நாளதுவரையாக்கப்பட்டுள்ளது.)

மேற்குறித்த மதிப்பீட்டு நட்டம் கணிப்பிடப்பட்ட முறை பின்னிணைப்பு XXX இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு நட்டம் அந்நாளில் உடனடியாக ஏற்பட்ட/ ஏற்படக் கூடிய நிலை மாத்திரமேயானதுடன் இதன் மூலம் நீண்டகாலமாக ஏற்படும் செல்வாக்கைக் கருத்திற்கொள்கையில் அம் மாற்றுவழி நட்டம் மேலும் உயர்வடைவதற்கான நிலையைத் தவிர்க்க முடியாதுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் வாய்மொழி சாட்சியமளித்தல் குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 157 முதல் 160 வரை)

5.1.18 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிய நடாத்தப்பட்ட ஏலவிற்பனைக்கு உரித்தாகப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 01 பில்லியன் தொகையான முறியின் பெறுமதிக்கு எதிராக ரூபா 10.058 பில்லியன் கூட்டுத்தொகையான கேள்விமனுவை ஏற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்காக மத்திய வங்கி ஆளுநரின் நடவடிக்கை பெருமளவில் தாக்கமளித்துள்ளமையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் உப குழுவால் இவ் ஏலவிற்பனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட வாய்மொழி சான்றுக் குறிப்புகளில் உள்ள பின்வரும் விடயங்கள் காரணமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(i) ஏலவிற்பனைக்காக கேள்வி மனு கோரப்பட்டு முடிவுற்றிருந்த போதிலும் பின்னர் மத்திய வங்கி ஆளுநரால் இவ் ஏலவிற்பனைக்காக முன்வைக்கப்பட்ட மொத்த கேள்வி மனுக்களின் அளவான ரூபா 20 பில்லியன் தொகையையும் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என அரச பொதுப்படுகடன் அத்தியட்சகர் திருமதி சீ.எம்.டீ.என்.கே. செனெவிரத்ன விடம் வினவியமை.

(ii) இவ்வாறு ரூபா 20 பில்லியன் வரை முறிகள் விநியோகிக்கப்பட்டால் இவை மிக உயர்ந்த வட்டி வீதமாகும் என்பதனால் இது ஏற்றதல்ல என அரச பொதுப்படுகடன் அத்தியட்சகர் திருமதி சீ.எம்.டீ.என்.கே. செனெவிரத்ன வும் மேலதிக அரச பொதுப்படுகடன் அத்தியட்சகர் டாக்டர். எம்.இசட்.எம். அசீம் இனால் மத்திய வங்கி ஆளுநருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை.

(iii) இதனை அடுத்து மத்திய வங்கி ஆளுநரால் ரூபா 10 பில்லியனிற்கு செல்லாமை ஏன் என அரச பொதுப்படுகடன் அத்தியட்சகரிடம் வினவப்பட்டு (Why don't you go for 10bn) அச் சந்தர்ப்பத்தின் போதும் ரூபா 10 பில்லியனிற்குச் செல்வதால் உயர் (thattoo much) வட்டி விகிதம் என எடுத்துரைக்கப்பட்டிருந்தமை.

(மேற்படி பந்திக்காக மத்திய வங்கி ஆளுநரின் எழுத்துமூல பதலிளித்தல் மூலம் எதிர்ப்புத் தெரிவிக்கப்படாதிருந்ததுடன், 2016 யூன் 29 ஆந் திகதியின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியின் மூலம் மேற்படி பந்தியிலுள்ள அவதானிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், அப் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 160 முதல் 177 வரை)

5.1.19 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியில் உள்ளவாறான நிலையான வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுவதற்கு அடிப்படையாகக் கொள்ளும் கடந்த வாரத்தின் போது நிலவிய இரண்டாம் நிலைச் சந்தையின் நிறையளிக்கப்பட்ட சராசரி வருவாய் விகிதம் 9.48 ஆகக் காணப்பட்டது. இவ்வாறிருக்கையில் குறித்த ஏலவிற்பனைக்காக 12.5 சதவீதமான நிலையான வட்டி விகிதத்தைப் பரிந்துரைத்திருந்தமை. மேலும், ஏலவிற்பனைக்கு இரு தினங்களிற்கு முன்னர் அதாவது 2015 பெப்ரவரி 25 ஆம் திகதிக்கு முன்னர் இறுதி வாரத்தின் இரண்டாம் நிலைச் சந்தையின் நிறையளிக்கப்பட்ட சராசரி வருவாய் விகிதம் 10.03 மாத்திரமே ஆகக் காணப்பட்டது. இதன் படி, 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிய ஏலவிற்பனைக்காக நிலையான வட்டி விகிதமாக 12.5 சதவீதம் தீர்மானிக்கப்பட்ட விதம் வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாறே உயர் வட்டி விகிதத்தின் கீழ் 30 ஆண்டு காலமான நீண்டகால மேலதிகக் கிரயமும் அரசாங்கத்திற்கு நேர்ந்த நட்டமாகக் கருதப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இங்கு அவதானிக்கப்பட்ட மிக முக்கிய விடயமாக 30 ஆண்டு காலமான நீண்டகால முறியின் வட்டி விகிதத்தில் நேரும் மிகச் சிறிய அதிகரிப்பாலும் அரசாங்கத்திற்கு பாரிய நிதி நட்டம் ஏற்படக்கூடும் என்பதாகும்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் வாய்மொழி சாட்சியமளித்தல் குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 177 முதல் 179 வரை)

## 5.2 2016 மார்ச் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறி விநியோகம்

மேற்குறித்த 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முறி விநியோகிப்பின் பின்னர் அவ்வாறு விலைமனுக்கள் கோரப்பட்ட முறிகளின் பெறுமதிக்கு மேலாக மிக உயர்ந்த பெறுமதியில் முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்த இரண்டாவது சந்தர்ப்பமாக 2016 மார்ச் 29 ஆம் திகதிமேற்கொள்ளப்பட்ட முறி விநியோகம் முன்னிலைப்படுத்தப்பட்டமையால் இது தொடர்பாக விசேடமாகப் பரீட்சிக்கப்பட்டது.

5.2.1 2016 மார்ச் 10 ஆம் திகதி மற்றும் மார்ச் 24 ஆம் திகதிகளில் முறிகளின் விற்பனைக்காக நடாத்தப்பட்டிருந்த ஏலவிற்பகைள் இரண்டும் எதிர்பார்க்கப்பட்ட விகிதத்தைப் பார்க்கிலும் கூடுதலான விகிதத்தைக் காண்பித்து கேள்வி மனுக்களை முன்வைத்ததன் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன. (பின்னிணைப்பு XXXI)

எவ்வாறெனினும், இச் சந்தர்ப்பங்களின் போது நேர் முறைக்கு நிதி பெற்றுக்கொள்ளப்படுவது தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டிருந்தமை குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேலே நிராகரிக்கப்பட்டமைக்கு காரணமாகக் கருதப்பட்ட விகிதங்கள் பின்வரும் அட்டவணையில் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6 - நிராகரிக்கப்பட்ட கேள்வி மனுக்களுக்கு உரித்தாக நிறையளிக்கப்பட்ட வருவாய் விகிதங்கள்

| ஏலவிற்பனைத் திகதி | முதிர்வுக் காலம் | சர்வதேச பிணைகள் இனங்காணல் இல. (ISIN) | நிறையளிக்கப்பட்ட வருவாய் விகிதங்கள் |
|---|---|---|---|
| 2016.03.10 | 03ஆண்டுகள்08மாதங்கள் | LKB00819K017 | 11.4498-12.2625 |
| | 05ஆண்டுகள்05 மாதங்கள் | LKB00821H019 | 11.8503-12.6855 |
| | 07ஆண்டுகள்10 மாதங்கள் | LKB01024A014 | 12.2004-12.9879 |
| | | | |
| 2016.03.24 | 04ஆண்டுகள்01 மாதம் | LKB00520E014 | 12.5000-14.1570 |
| | 05ஆண்டுகள்06 மாதங்கள் | LKB00721J157 | 12.6999-14.4099 |
| | 06ஆண்டுகள்06 மாதங்கள் | LKB00922J011 | 12.8997-14.8950 |
| | 08ஆண்டுகள்11 மாதங்கள் | LKB01025C157 | 12.9996-14.7510 |

பின்னர் மேற்குறித்த (ஆ) உப தலைப்பில் காண்பிக்கப்பட்ட 2016 மார்ச் 29 ஆம் திகதிய ரூபா 10 பில்லியன் படியான பல்வேறு முதிர்வுக் காலங்களைக் கொண்டு முதிர்வடையும் 04 முறிகளுக்கு அதாவது ரூபா 40 பில்லியன் தொகையான முறிகளின் விநியோகத்திற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

அங்கு விநியோகிக்கப்பட்ட அந்த 04 முறிகளுக்கான விலைமனுக்களின் பெறுவனவுகளும் அவ் விலைமனுக்களின் ஏற்றுக்கொள்ளல்களும் பின்வருமாறாகக் காணப்பட்டன.

அட்டவணை 7 - விலைமனுக்களின் பெறுவனவும் ஏற்றுக்கொள்ளலும்

| தொடர் இல. | சர்வதேச பிணைகள் இனங்காணல் இல.(ISIN) | விலைமனுக்களின் கோரல் பெறுமதி ரூபா. பில்லியன் | விலைமனுக்கள் பெற்றுக்கொள் ளப்பட்ட பெறுமதி ரூபா. பில்லியன் | ஏற்றுக் கொள்ளப்பட்ட முறிகளின் முகப் பெறுமதி ரூபா. பில்லியன் |
|---|---|---|---|---|
| 01. | LKB00520E014 | 10 | 27.022 | 10.272 |
| 02. | LKB01025C157 | 10 | 36.915 | 21.475 |
| 03. | LKB01226F014 | 10 | 32.560 | 17.010 |
| 04. | LKB01530E152 | 10 | 45.925 | 28.975 |
| | **மொத்தம்** | **40** | **142.422** | **77.732** |

இங்கு அவதானிக்கப்படும் ஒரு முக்கிய விடயம் ரூபா 40 பில்லியன் வரையறைக்கு கோரப்பட்டதுடன் அவ் விலைகளில் மேலும் மேலதிகமான ரூபா 37.732 பில்லியன் (முகப்பெறுமதி) அதாவது ரூபா 77.732 பில்லியன் (முகப்பெறுமதி) வரை முறிகள் விநியோகிக்கப்பட்டமையாகும். இவ்வாறு விலைமனுக்கள் கோரப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமாக விநியோகிக்கப்பட்டிருந்த முறிகளில் 60 சதவீதமானவற்றை K நிறுவனம் உரித்தாக்கிக்கொண்டிருந்தது. அந் நிறுவனத்தால் பல்வேறு வட்டி விகிதங்களில் மேற்குறித்த முறிகளில் 4 வகையானவற்றை உரித்தாக்கிய விகிதத்தை விளக்குகையில் பின்வரும் அட்டவணையின் படி குறைந்த வருவாய் விகிதத்தின் கீழ் முதல் முறியிலிருந்து 0.5 சதவீதத்தை மாத்திரமே உரித்தாக்கிக்கொண்ட K நிறுவனம், உயர் வருவாய் விகிதத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள ஏனைய மூன்று முறிகளில் இருந்து 35 சதவீதத்திலிருந்து 44 சதவீதம் வரையான அளவைப் பெற்றுக்கொள்ளும் திறன் கொண்டிருந்தமையாகும். அதாவது கழிவின் அளவு அதிகரிக்கையில் கூடுதலான முறிகளின் அளவைப் பெற்றுக்கொண்டிருந்தமையாகும்.

அட்டவணை 8 - ரூபா 40 பில்லியனிற்கு மேலாக கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் K நிறுவனத்திற்கு உரித்தான அளவுகள்.

| **தொடர் இல.** | **சர்வதேச பிணைகள் இனங்காணல் இல.(ISIN)** | **பெற்றுக்கொள்ளப்பட்ட வீதம்** | **நிறையளிக்கப்பட்ட விகிதம்** |
|---|---|---|---|
| 01. | LKB00520E014 | 0.5% | **12.6909** |
| 02. | LKB01025C157 | 39.3% | **13.0689 - 13.7979** |
| 03. | LKB01226F014 | 44.7% | **13.2984 - 13.9311** |
| 04. | LKB01530E152 | 35.6% | **13.1823 - 14.0742** |

இம் முறி விநியோகிக்கப்பட்ட தினத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனைகள் இரண்டும் நிராகரிக்கப்பட்ட அடிப்படையான வருவாய் விகித அதிகரிப்பு இவ் ஏலவிற்பனையின் போதும் இவ்வாறே அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் உயர் வருவாய் விகிதங்களுக்கு அதாவது 14.0742 சதவீதம் வரை வருவாய் விகிதத்திற்கு இம் முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இங்கு கண்டறியப்பட்ட முக்கிய விடயமாக மேற்குறித்த இரு சந்தர்ப்பங்களின் போதும் நிராகரிக்கப்பட்ட விகிதத்திற்கு மேலாக இம் முறைக்கான விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையாகும்.

மேலும், மேற்குறித்தவாறு 4 முறிகளின் மூலம் ரூபா 77.73 பில்லியன் தொகையான முகப் பெறுமதி கிடைக்கக் கூடியவாறு முறிகளை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கழிவு விகிதத்திற்கு முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டவாறு ரூபா 59.325 பில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. இதன் படி, எஞ்சிய ரூபா 18.407 பில்லியன் தொகையான வேறு குறுங்காலக் கடன் மூலத்தினால் எய்தப்பட நேர்ந்திருந்தது.

அட்டவணை 9 – கழிவு விகிதத்திற்கு முறிகள் விநியோகிக்கப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட முறிகளின் முகப் பெறுமதி கிடைக்கப்பெற்றிராமையால் வேறு குறுங்காலக் கடன் மூலத்தினால் இது எய்தப்பட்டமை.


| ஏல விற்பனை நிகழ்ந்த திகதி | சர்வதேச பிணைகள் இனங்காணல் இல.(ISIN) | முதிர் வடையும் காலம் | ஏல விற்பனை செய்யும் மொத்த பெறுமதி ரூபா. பில்லியன் | செலுத்தப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா. பில்லியன் | வேறுபாடு ரூபா. பில்லியன் |
|---|---|---|---|---|---|
| **2016.03.29** | **LKB00520E014** | **10 Y 2 M** | **10.272** | **8.734** | **1.538** |
| | **LKB01025C157** | **8 Y 11 M** | **21.475** | **16.250** | **5.225** |
| | **LKB01226F014** | **4 Y 1 M** | **17.010** | **13.161** | **3.848** |
| | **LKB01530E152** | **14 y 1 M** | **28.975** | **21.180** | **7.794** |
| | **மொத்தம்** | | **77.732** | **59.325** | **18.407** |

மேலும் 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிய முறிகளின் ஏலவிற்பனையிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக விலைக் கோரல்கள் கோரப்பட்ட ரூபா 1 பில்லியன் தொகையான அளவிற்கு மேலாக ரூபா 10.058 பில்லியன் வரை கேள்வி மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2016 மார்ச் 29 ஆம் திகதி ரூபா 40 பில்லியன் தொகை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டு ரூபா 77.73 பில்லியன் வரை கேள்வி மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தவிர அவ்வாறு பாரியளவில் எதிர்பார்க்கப்பட்ட வரையறைகளுக்கு மேலாக முறிகள் விநியோகங்களைக் கருத்திற்கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் நேர்ந்திருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. இதன் படி, அவ் எதிர்பார்க்கப்பட்ட எல்லை மிகவும் பாரியளவில் மீறப்பட்டு முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்த காரணத்தால் அவ் ஒவ்வொரு எல்லையும் மீறப்பட்ட பங்கை உரித்தாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் பெருமளவில் K நிறுவனத்திற்கு உரித்தானமை தெளிவாகக் காணக்கூடிய வகையில் அதிகரித்துள்ளமையை பின்வரும் அட்டவணையின் மூலமும் வரைபின் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றது.

அட்டவணை 10 - K நிறுவனம் பெற்றுக்கொண்ட அளவு

| தொடர் இல. | சர்வதேச பிணைகள் இனங்காணல் இல.(ISIN) | விநியோகிக்கப்பட்ட மொத்த முறிகளின் பெறுமதி<br>ரூபா. பில்லியன் | K நிறுவனம் பெற்றுக்கொண்ட அளவு<br>ரூபா. பில்லியன் |
|---|---|---|---|
| 01 | LKB00520E014 | 0.272 | - |
| 02 | LKB01025C157 | 11.475 | 7.950 |
| 03 | LKB01226F014 | 7.010 | 6.600 |
| 04 | LKB01530E152 | 18.975 | 8.075 |

வரைபடம் 1 – அட்டவணை 10 - K நிறுவனம் பெற்றுக்கொண்ட அளவு




(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் வாய்மொழி சாட்சியமளித்தல் குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி எவ்வித மாற்றமுமின்றி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 179 முதல் 184 வரை)

5.2.2 மேலும் இவ் முதன்மை முகவரால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு அவை தோல்வியுற்ற சந்தர்ப்பங்களையும் ஏனைய முதன்மை முகவர்களால் கேள்வி தோல்வியுற்ற சந்தர்ப்பங்களையும் ஒப்பிடுகையில் K நிறுவனத்தின் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை ஒப்பீட்டு ரீதியாக குறைந்த நிலையில் நிலவியமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 184 )

5.2.3 இங்கு கண்டறியப்பட்ட மிக முக்கிய விடயம் முதன்மைச் சந்தையில் முறிகள் கொள்வனவு செய்யக்கூடிய நிறுவகமான ஊழியர் சேமலாப நிதியத்தால் 2016 மார்ச் 29 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட முறிகளில் இருந்து வருவாய் விகிதம் 12.20 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 9.736 பில்லியன் (பின்னிணைப்பு xxix a) பெறுமதியான முறிகள் இரண்டாம் சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையாகும். ஊழியர் சேமலாப நிதியம் இம் முறிக்காக 2016 மார்ச் 29 ஆம் திகதியில் உள்ளவாறு முதன்மைச் சந்தைக்கு விலைமனுக்கள் பின்வருமாறு மிகக் குறைவான முறிகளின் அளவிற்கே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தெளிவாகியுள்ளது. இந் நிலை பின்னிணைப்பு (xxix b) இன் தகவல்களின் மூலம் தெளிவாகின்றது. இதன் படி, அச் சகல கோரல்களும் வெற்றி பெற்றிருந்ததுடன் அவர்களுக்கு தேவையான எஞ்சிய முறிகளின் எண்ணிக்கை நேரடியாக முதன்மைச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்து கொள்வதற்கு விண்ணப்பித்தேனும் அல்லாது இரண்டாம் நிலைச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை பிரச்சனைக்குரியதாகும். மேலும் மத்திய வங்கியின் நிதிச் சந்தையின் பொறுப்பில் நிலவும் நிறுவனமான ஊழியர் சேமலாப நிதியம் இவ்வாறு செயற்படுவது தொடர்பாக மத்திய வங்கியால் கவனம் செலுத்தப்பட்டிராமையும் பிரச்சனைக்குரிய நிலையாகும்.

அட்டவணை 11 - ஊழியர் சேமலாப நிதியத்தின் வெற்றி

| **தொடர் இல.** | **விலை மனுக்கள் சமர்ப்பித்தல் ரூபா. பில்லியன்** | **ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை மனுக்களின் பெறுமதி ரூபா. பில்லியன்** |
|---|---|---|
| 01. | - | - |
| 02. | 1.000 | 1.000 |
| 03. | 0.500 | 0.500 |
| 04. | 1.000 | 1.000 |
| **மொத்தம்** | **2.500** | **2.500** |

இம் முறிகளை விநியோகிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெயரளவுப் பெறுமதியான ரூபா 40 பில்லியன் தொகைக்காக ரூபா 77.732 பில்லியன் வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யப்படாது முறி விநியோகப் பெயரளவுப் பெறுமதியான ரூபா 40 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருப்பின் பின்வரும் அட்டவணையில் கணிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 784,898,755 தொகையான மதிப்பீட்டு நட்டத்தைத் தவிர்த்திருக்க முடியும்.

அட்டவணை 12 – வரையறைகள் மீறப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையால் மதிப்பீட்டு நட்டம்

| **தொடர் இல.** | **வணிகர்கள்** | **கேள்வி மனுக்கள் ரூபா.** | **முறியின் முகப்பெறுமதி (அரசாங்கத்தின் பொறுப்பு) ரூபா.** | **செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா.** | **நட்டம் ரூபா.** |
|---|---|---|---|---|---|
| 31 | B | 84.3512 | 800,000,000 | **8,733,875,000** | - |
| | **மொத்தம்** | | | | **-** |
| **63** | **J** | **75.57580** | **120,000,000** | **7,886,053,130** | **-** |
| 64 | G | 75.4451 | 100,000,000 | 7,961,498,230 | 130,700 |
| 65 | J | 75.4451 | 120,000,000 | 8,052,032,350 | 156,840 |
| 66 | J | 75.3147 | 120,000,000 | 8,142,409,990 | 313,320 |
| 67 | K | 75.2279 | 50,000,000 | 8,180,023,940 | 173,950 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 68 | J | 75.2279 | 160,000,000 | 8,300,388,580 | 556,640 |
| 69 | K | 75.2279 | 200,000,000 | 8,450,844,380 | 695,800 |
| 70 | J | 75.1845 | 120,000,000 | 8,541,065,780 | 469,560 |
| 71 | J | 75.0547 | 120,000,000 | 8,631,131,420 | 625,320 |
| 72 | J | 74.9253 | 120,000,000 | 8,721,041,780 | 780,600 |
| 73 | M | 74.8393 | 100,000,000 | 8,795,881,080 | 736,500 |
| 74 | K | 74.7961 | 50,000,000 | 8,833,279,130 | 389,850 |
| 75 | K | 74.7961 | 100,000,000 | 8,908,075,230 | 779,700 |
| 76 | P | 74.7961 | 100,000,000 | 8,982,871,330 | 779,700 |
| 77 | J | 74.7961 | 120,000,000 | 9,072,626,650 | 935,640 |
| 78 | K | 74.7961 | 250,000,000 | 9,259,616,900 | 1,949,250 |
| 79 | M | 74.7959 | 160,000,000 | 9,379,290,340 | 1,247,840 |
| 80 | C | 74.7959 | 200,000,000 | 9,528,882,140 | 1,559,800 |
| 81 | K | 74.3678 | 50,000,000 | 9,566,066,040 | 604,000 |
| 82 | J | 74.3678 | 200,000,000 | 9,714,801,640 | 2,416,000 |
| 83 | K | 74.3678 | 250,000,000 | 9,900,721,140 | 3,020,000 |
| 84 | K | 73.943 | 50,000,000 | 9,937,692,640 | 816,400 |
| 85 | K | 73.943 | 500,000,000 | 10,307,407,640 | 8,164,000 |
| 86 | B | 73.9345 | 250,000,000 | 10,492,243,890 | 4,103,250 |
| 87 | C | 73.732 | 100,000,000 | 10,565,975,890 | 1,843,800 |
| 88 | P | 73.7319 | 100,000,000 | 10,639,707,790 | 1,843,900 |
| 89 | K | 73.5216 | 50,000,000 | 10,676,468,590 | 1,027,100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 90 | J | 73.5216 | 250,000,000 | 10,860,272,590 | 5,135,500 |
| 91 | K | 73.5216 | 750,000,000 | 11,411,684,590 | 15,406,500 |
| 92 | K | 73.1036 | 50,000,000 | 11,448,236,390 | 1,236,100 |
| 93 | M | 73.1036 | 180,000,000 | 11,579,822,870 | 4,449,960 |
| 94 | K | 73.1036 | 750,000,000 | 12,128,099,870 | 18,541,500 |
| 95 | M | 72.6891 | 100,000,000 | 12,200,788,970 | 2,886,700 |
| 96 | C | 72.6891 | 100,000,000 | 12,273,478,070 | 2,886,700 |
| 97 | P | 72.68902 | 100,000,000 | 12,346,167,090 | 2,886,780 |
| 98 | K | 72.689 | 50,000,000 | 12,382,511,590 | 1,443,400 |
| 99 | F | 72.689 | 100,000,000 | 12,455,200,590 | 2,886,800 |
| 100 | K | 72.689 | 750,000,000 | 13,000,368,090 | 21,651,000 |
| 101 | B | 72.656 | 180,000,000 | 13,131,148,890 | 5,255,640 |
| 102 | K | 72.483 | 2,000,000,000 | 14,580,808,890 | 61,856,000 |
| 103 | M | 72.2778 | 100,000,000 | 14,653,086,690 | 3,298,000 |
| 104 | K | 72.2777 | 50,000,000 | 14,689,225,540 | 1,649,050 |
| 105 | J | 72.2777 | 160,000,000 | 14,804,869,860 | 5,276,960 |
| 106 | K | 72.2777 | 2,000,000,000 | 16,250,423,860 | 65,962,000 |
| | **மொத்தம்** | | | | **258,828,050** |
| **70** | **C** | **75.91150** | **200,000,000** | **8,012,848,545.00** | |
| 71 | J | 75.821 | 60,000,000 | 8,058,341,145 | 54,300 |
| 72 | J | 75.6858 | 60,000,000 | 8,103,752,625 | 135,420 |
| 73 | K | 75.6858 | 500,000,000 | 8,482,181,625 | 1,128,500 |
| 74 | K | 75.2376 | 750,000,000 | 9,046,463,625 | 5,054,250 |
| 75 | K | 74.7933 | 100,000,000 | 9,121,256,925 | 1,118,200 |
| 76 | C | 74.7933 | 200,000,000 | 9,270,843,525 | 2,236,400 |
| 77 | K | 74.7933 | 750,000,000 | 9,831,793,275 | 8,386,500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 78 | K | 74.134 | 500,000,000 | 10,202,463,275 | 8,887,500 |
| 79 | K | 74.0904 | 500,000,000 | 10,572,915,275 | 9,105,500 |
| 80 | K | 74.0468 | 500,000,000 | 10,943,149,275 | 9,323,500 |
| 81 | K | 74.0032 | 500,000,000 | 11,313,165,275 | 9,541,500 |
| 82 | K | 73.9597 | 500,000,000 | 11,682,963,775 | 9,759,000 |
| 83 | K | 73.9162 | 2,000,000,000 | 13,161,287,775 | 39,906,000 |
| | மொத்தம் | | | | **104,636,570** |
| **88** | **K** | **73.71470** | **1,000,000,000.00** | **8,185,426,680.00** | **-** |
| 89 | M | 73.7146 | 50,000,000 | 8,222,283,980 | 50 |
| 90 | P | 73.4701 | 100,000,000 | 8,295,754,080 | 244,600 |
| 91 | K | 73.2268 | 25,000,000 | 8,314,060,780 | 121,975 |
| 92 | P | 73.2268 | 50,000,000 | 8,350,674,180 | 243,950 |
| 93 | P | 73.2268 | 100,000,000 | 8,423,900,980 | 487,900 |
| 94 | K | 73.2268 | 1,000,000,000 | 9,156,168,980 | 4,879,000 |
| 95 | M | 73.2267 | 20,000,000 | 9,170,814,320 | 97,600 |
| 96 | C | 72.9849 | 100,000,000 | 9,243,799,220 | 729,800 |
| 97 | P | 72.9848 | 150,000,000 | 9,353,276,420 | 1,094,850 |
| 98 | P | 72.9848 | 500,000,000 | 9,718,200,420 | 3,649,500 |
| 99 | P | 72.9848 | 600,000,000 | 10,156,109,220 | 4,379,400 |
| 100 | K | 72.7441 | 25,000,000 | 10,174,295,245 | 242,650 |
| 101 | J | 72.7441 | 40,000,000 | 10,203,392,885 | 388,240 |
| 102 | P | 72.7441 | 100,000,000 | 10,276,136,985 | 970,600 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 103 | K | 72.7441 | 1,000,000,000 | 11,003,577,985 | 9,706,000 |
| 104 | H | 72.744 | 10,000,000 | 11,010,852,385 | 97,070 |
| 105 | H | 72.2665 | 10,000,000 | 11,018,079,035 | 144,820 |
| 106 | K | 72.2665 | 25,000,000 | 11,036,145,660 | 362,050 |
| 107 | M | 72.2665 | 40,000,000 | 11,065,052,260 | 579,280 |
| 108 | P | 72.2665 | 100,000,000 | 11,137,318,760 | 1,448,200 |
| 109 | K | 72.2665 | 1,000,000,000 | 11,859,983,760 | 14,482,000 |
| 110 | P | 72.0296 | 250,000,000 | 12,040,057,760 | 4,212,750 |
| 111 | H | 71.794 | 10,000,000 | 12,047,237,160 | 192,070 |
| 112 | J | 71.794 | 60,000,000 | 12,090,313,560 | 1,152,420 |
| 113 | M | 71.794 | 100,000,000 | 12,162,107,560 | 1,920,700 |
| 114 | C | 71.794 | 100,000,000 | 12,233,901,560 | 1,920,700 |
| 115 | P | 71.794 | 550,000,000 | 12,628,768,560 | 10,563,850 |
| 116 | P | 71.794 | 550,000,000 | 13,023,635,560 | 10,563,850 |
| 117 | M | 71.3266 | 60,000,000 | 13,066,431,520 | 1,432,860 |
| 118 | P | 71.3265 | 100,000,000 | 13,137,758,020 | 2,388,200 |
| 119 | K | 71.0946 | 1,000,000,000 | 13,848,704,020 | 26,201,000 |
| 120 | K | 71.0484 | 1,000,000,000 | 14,559,188,020 | 26,663,000 |
| 121 | K | 71.0022 | 1,000,000,000 | 15,269,210,020 | 27,125,000 |
| 122 | K | 70.9561 | 1,000,000,000 | 15,978,771,020 | 27,586,000 |
| 123 | K | 70.9561 | 1,000,000,000 | 16,688,332,020 | 27,586,000 |
| 124 | J | 70.864 | 80,000,000 | 16,745,023,220 | 2,280,560 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 125 | P | 70.86395 | 100,000,000 | 16,815,887,170 | 2,850,750 |
| 126 | P | 70.63451 | 500,000,000 | 17,169,059,720 | 15,400,950 |
| 127 | P | 70.63451 | 500,000,000 | 17,522,232,270 | 15,400,950 |
| 128 | C | 70.6345 | 100,000,000 | 17,592,866,770 | 3,080,200 |
| 129 | M | 70.4065 | 15,000,000 | 17,603,427,745 | 496,230 |
| 130 | M | 70.4065 | 80,000,000 | 17,659,752,945 | 2,646,560 |
| 131 | I | 70.4063 | 5,000,000,000 | 21,180,067,945 | 165,420,000 |
| | **மொத்தம்** | | | | **421,434,135** |
| | **முழு மொத்தம்** | | | | **784,898,755** |

(2016 யூன் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி அட்டவணையில் "செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி" நிரலில் இருந்த தட்டச்சு வழுக்களை திருத்தி நாளதுவரையாக்கப்பட்டுள்ளது.)

மேற்குறித்த மதிப்பீட்டு நட்டம் கணிப்பிடப்பட்ட முறை பின்னிணைப்பு (xxxii) இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 184 முதல் 185 வரை)

## 5.3 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி நேரடி முறைக்கு முறிகள் விநியோகங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதை அடுத்து அந் நிகழ்விற்கு உரித்தாக நேர்ந்த நிலைமைகள்

மேற்குறித்த 5.1.11 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டவாறு 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் நேரடி முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதை அடுத்து 2015 ஏப்ரல் மாதம் முதல் இது வரை விநியோகிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முறியும் முதன்மை ஏலவிற்பனை முறையின் கீழ் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.3.1 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிக்குப் பின் பெரும்பாலான முறிகளின் விநியோகிப்பின் போது விலைமனுக்களைச் சமர்ப்பித்த முதல் சந்தர்ப்பத்திலிருந்தே முறிக்காக கழிவுடன் விலைமனுக்கள் அதாவது பெயரளவுப் பெறுமதியிலும் பார்க்கக் குறைவான பெறுமதிக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக வருவாய் விகிதம் வட்டி விகிதத்தைப் பார்க்கிலும் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமையாகும். இதன் மூலம் அரசாங்கத்திற்கு மேலதிகக் கிரயத்தை ஏற்பதற்கு (முதலீட்டாளர்களுக்கு கழிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு) நேர்ந்தது. அதாவது முகப் பெறுமதி ரூபா 100 தொகையான முறிகள், கழிவுடன் இதனைப் பார்க்கிலும் குறைந்த பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், முறிகள் முதிர்வடையும் போது ரூபா 100 இற்கு மீளச் செலுத்தப்பட வேண்டியிருந்த காரணத்தால் அக் கழிவுப் பெறுமதி முறிகள் விநியோகிக்கப்பட்ட தினத்திலேயே அரசாங்கத்திற்கு மேலதிகப் பொறுப்பாக நேர்ந்திருந்தது. கழிவிடப்பட்ட பெறுமதிக்கு முறிகள் முதலாந்தர வணிகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும் அவற்றின் இரண்டாம் நிலைச் சந்தை விலை உயர் நிலையில் நிலவிய காரணத்தால் முதலாந்தர வணிகர்களுக்கு இம் முறிகள் இரண்டாம் நிலைச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதன் மூலம் கூடுதலான இலாப எல்லையைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை பெறப்படுவதுடன் அந் நிலைகளில் அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகக் காணப்பட்ட இலாப நிலை முதலாந்தர வணிகர்களுக்கு மாற்றப்படுவது அவதானிக்கப்பட்டது. இச் சூழ்நிலையிலும் மொத்தப் பணத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியால் முதன்மை முகவர்கள் முன்வைத்த விலைமனுக்களை ஏற்று ஏலவிற்பனையின் மூலம் கழிவுடன் முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் ஏனைய விடயங்களின் பிரகாரம் அந்த பந்தி தொடர்பில் கருத்தொருமித்தலின்மைகள்

காணப்படாமையாலும் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கு எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 185 முதல் 186 வரை)


5.3.2 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியின் பின்னர் நேர்ந்த முறைமையின் மாற்றத்துடன் திறைசேரி முறிகளின் விநியோகத்தில் முதலாந்தர வணிகர்களான ஊழியர் சேமலாப நிதியம், தேசிய சேமிப்பு வங்கி நிதிய முகாமைத்துவ கம்பனி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற அரசாங்க நிறுவனங்கள் அவ் ஏலவிற்பனைகளில் வெற்றிகரமான விளைவுகளைப் பெற்றுக்கொள்வதில் நலிவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு: பட்டோலையின் பக்க இல. 187 )

5.3.3 சில திறைசேரி முறிகள் ஏலவிற்பனையின் போது உயர் வட்டி விகிதத்துடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்த காரணத்தால் அவ் ஏலவிற்பனை முற்றாக நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. 2015 ஆம் ஆண்டு முதல் 2016 மே 31 ஆம் திகதி வரை நிலவிய ஏலவிற்பனைகளில் 5 ஏலவிற்பனைகள் மேற்குறித்த நிலையில் முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது அத்தகைய நிராகரிப்புகள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. இதன் படி, 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முறைமை மாற்றத்தை அடுத்தே முதலாந்தர வணிகர்களால் இலங்கை மத்திய வங்கி எதிர்பார்த்த விலைகளைப் பார்க்கிலும் மிகவும் உயர்வான விலைகளுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போக்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு xxxiii) அதாவது இரண்டாம் நிலைச் சந்தை நிலவும் விகிதாசாரங்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் உயர் விகிதங்களுக்காக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையாகும். இந் நிலை கீழே காண்பிக்கப்பட்டுள்ள வரைபடம் 2 இன் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 2 – ஏல விற்பனை முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் வருவாய் விகிதத்திற்கு நேர்ந்த தாக்கம்




தொடர்பு - இலங்கை மத்திய வங்கியின் வாராந்த பொருளாதார விளக்கம் - இலங்கை மத்திய வங்கி இணையதளம்

மேலே காண்பிக்கப்பட்டுள்ள போக்கு பல்வேறுபட்ட மூலங்களின் தாக்கத்தால் நேர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்ட போதிலும் 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முறிகளின் விநியோகத்திற்கு உரித்தான கொள்கை ரீதியான தீர்மானமும் துணைபுரிந்தமையை எதிர்வு கூறுவது சர்ச்சைக்குரியதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் ஏனைய விடயங்களின் பிரகாரம் அந்த பந்தி தொடர்பில் கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கு எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 187 முதல் 188 வரை)

## 6. முறைமைகளின் குறைபாடுகள்

6.1 இலங்கை மத்திய வங்கியால் நேர் முறை மேலும் பின்பற்றப்படாது முற்றாகவே முதன்மை ஏலவிற்பனை முறை எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுகையில், இதனால் ஏற்படும் நிதித் தாக்கங்கள் தொடர்பான விளைவுகளை பகுப்பாய்வு செய்து அக் கற்கையின் விளைவுகள் மற்றும் பரிந்துரைகளிற்கு இணங்கும் வகையில் அத் தீர்மானத்தை எடுத்ததாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 189 )

6.2 முதலாந்தர வணிகர்கள் ஏலவிற்பனையின் போது குறைந்த விலைக்கு முறிகளைக் கொள்வனவு செய்து அம் முறிகளை மீள உடனடியாக உயர் விலைக்கு இரண்டாம் நிலைச் சந்தையின் மூலம் விற்பனை செய்வதன் மூலம் இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடிய இலாபம் கிடைக்கப்பெறாது போயிற்று. இது இலங்கை மத்திய வங்கிக்கு வெளித்தரப்பினரால் சந்தை வட்டி விகிதத்தை செயற்கையான கையாளல் என்பதுவும், இதன் மூலம் வட்டி விகிதங்கள் அடிப்படையின்றி தளம்பலுக்கு உட்படுத்தப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இந் நிலையை கட்டுப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள மத்திய வங்கியால் இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு: பட்டோலையின் பக்க இல. 189 )

6.3 மேற்குறித்த 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியில் நிலவும் நிதிச் சந்தையை ஒழுங்குபடுத்தும் பொறுப்பைச் சரியாக மேற்கொள்வதற்காக பணச் சந்தையின் போக்குக் குறித்து முக்கியமான சகல தரவுகளும் தம்மிடம் வைத்துக்கொள்ளக் கூடிய முறைமை ஒன்று இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட வேண்டிய போதிலும் கீழே காண்பிக்கப்பட்டுள்ள

அவதானிப்புகளின் காரணமாக இலங்கை மத்திய வங்கிக்கு அவ் ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டை சரியாக மேற்கொள்ள இயலுமா என்பது குறித்த பிரச்சினை எழுந்துள்ளது.

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியினால் மேற்படி பந்திக்காக வழங்கப்பட்ட எழுத்துமூல பதலளித்தலின் படி மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையாலும், அப் பந்தி தொடர்பில் இணக்கமின்மை காணப்படாமையாலும் அப் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 190 )

6.4 இலங்கை மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்ட முறிகளை அறிமுகப்படுத்தவதற்காக அவற்றின் முதிர்வுத் திகதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சர்வதேச பிணைகள் இனங்காணல் இலக்கம் (International Security Identification Number) பயன்படுத்தப்படுகின்றது. ஒரே திகதியில் முதிர்வடையும் முறிகள் சிலவற்றை அவ்வப்போது விநியோகிக்கையில் அம் முறிகளுக்காக அவ் ஒரே சர்வதேச பிணைகள் இனங்காணல் இலக்கம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் பதிவுகள் மேற்கொள்ளப்படுகையில் அம் முறிகள் எத் திகதியில் விநியோகிக்கப்பட்ட முறிகள் என்பதனை வெவ்வேறாக இனங்காணப்பட முடியாதென கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தமை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 190 முதல் 191 வரை)

6.5 இலங்கை மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்கையில் சர்வதேச பிணைகள் இனங்காணல் இலக்கமும் அம் முறிகளின் முகப்பெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதி போன்ற தகவல்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் அம் முறிகள் இரண்டாம் நிலைச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பெறுமதியும் வருவாய் விகிதம் தொடர்பான தரவுகள் இலங்கை மத்திய வங்கியிடம் இல்லை எனவும் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தமை.

(மேற்படி பந்தி தொடர்பில் மத்தியவங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்காமையாலும், குழுவினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட வினாக்களிற்கான பதிலளித்தல்கள் மூலம் கணக்காய்வு அறிக்கைக்கு தாக்கமேற்படாமையாலும், ஏனைய தகவல்களினால் அப் பந்திக்கு இணக்கமின்மை காணப்படாமையாலும் அப் பந்திநாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 191 முதல் 192 வரை)

**6.6** மேற்குறித்த 5.1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான மொத்தத் தொகையையும் ஏலவிற்பனை மூலம் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் மேற்குறித்த 5.1.1 ஆம் பந்தியின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியிடம் உள்ள வட்டி விகிதக் கட்டுப்பாட்டுப் பொறுப்பு உள்ளடங்கலான விடயங்களைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானமா என்பது தெளிவின்மை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 192 )

**6.7** இவ்வாறே 5.1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தை எடுக்கும் போது மேற்குறித்த 5.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இணைப்பில் காண்பிக்கப்பட்ட விடயங்களும் தீர்மானங்களும் தொடர்பாகக் கவனம் எடுக்கப்பட்டதாக தெளிவற்றிருந்தமை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 192 முதல் 193 வரை)

**6.8** மேலும் மேற்குறித்த 5.1.11 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு நேரடி முறையை இடைநிறுத்தி ஏலவிற்பனை முறையை செயற்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலில் அல்லது வேறு எழுத்து மூல சட்டத்தில் மத்திய வங்கி ஆளுநருக்கு அத்தகைய மிக முக்கியமான, சிக்கலான மற்றும் உணர்வு பூர்வமான தீர்மானத்தை எடுக்கும் தன்னிச்சை உண்டா என்பது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 193 )

**6.9** மேற்குறித்த 5.1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தை அடுத்து இது வரையில் ஒரு வருடத்திற்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் அத் தீர்மானத்தின் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக பணச் சந்தைக்கு நேர்ந்துள்ள தாக்கம் தொடர்பாக கற்கையொன்றை மேற்கொண்டு அத் தற்காலிகமான இடைநிறுத்தத்தை நிரந்தரமாக்குவதற்கு, அகற்றுவதற்கு, மீளக் கருத்திற்கொள்ளப்படுவதற்கு அல்லது வேறு ஏதேனும் நிச்சயமான விகிதத்தில் நேரடி முறையில் அல்லது ஏலவிற்பனை முறை தேர்ந்தெடுக்கப்படல் போன்ற மாற்று முறையொன்று பின்பற்றப்பட வேண்டுமா என்பது குறித்து பின்தொடர் நடவடிக்கை அல்லது முறையான கற்கை மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 193 முதல் 194 வரை)

**6.10** ஏலவிற்பனை முறையின் படி, கழிவுடன் முறிகளைப் பெற்றுக்கொண்ட முதலாந்தர வணிகர்கள் அவற்றை உடனடியாக இரண்டாம் நிலைச் சந்தையில் விற்பனை செய்து அதிகளவிலான இலாபத்தைப் பெற்றுக்கொள்கின்றார்களா, இதன் மூலம் அரசாங்கத்திற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய இலாபம் வேறு தரப்பினருக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பது குறித்து கற்கையொன்றை மேற்கொள்வதற்கு அல்லது

அத்தகைய கற்கையொன்றை மேற்கொள்வதற்குத் தேவையான தரவுகள் தம்வசம் வைத்துக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான தகவல்களும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு: பட்டோலையின் பக்க இல. 194 )

**6.11** அரசாங்கப் பிரிவின் முதலாந்தர வணிகர்கள் இவ் ஏலவிற்பனைகளின் போது பெற்றுக்கொள்ளும் வெற்றியைக் குறைப்பதற்கும் தனியார் பிரிவுகளிற்கு அவ் வெற்றி உயர்வடைவதற்கான காரணங்களை ஆராய்ந்தறிந்து அரசாங்கத்திற்கு குறைந்த கிரயத்துடனான நிதியத்தைச் சேகரிக்கும் பொறுப்பு எய்தப்படும் வகையில் தேவையான ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்தமைக்கு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 194 முதல் 195 வரை)

**6.12** மேலும், கழிவுடன் முறிகளைக் கொள்வனவு செய்த தனியார் பிரிவின் முதலாந்தர வணிகர்களிடமிருந்து அம் முறிகள் கொள்வனவு செய்யப்பட்டு மிகக் குறுகிய நாட்களில் அரசாங்கப் பிரிவின் வணிகர்கள் அல்லது நிறுவனங்கள் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் முறிகளைக் கொள்வனவு செய்துள்ளனவா என்பது குறித்து பரீட்சிக்கப்பட்டமைக்கு அல்லது அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவ்வாறு அரசாங்கத்திற்கு நேரும் நிதி நட்டத்தைக் குறைப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியால் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டிராமையாலும், செயற்குழுவினால் மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட எழுத்துமூல வினாக்களுக்கு கிடைக்கப்பெற்ற பதில்களின் பிரகாரமும் கணக்காய்வு அவதானிப்புக்கு தாக்கமளிக்காமையாலும் ஏனைய தகவல்கள் மூலம் அந்த பந்தி

தொடர்பில் கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கு எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 195 முதல் 197 வரை)

**6.13** தனியார் பிரிவின் முதலாந்தர வணிகர்களால் தமக்காக முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு அரசாங்கப் பிரிவின் வணிகர்களூடாக மேற்கொள்வதன் மூலம் அரசாங்கப் பிரிவிற்கும் தனியார் பிரிவிற்கும் கிடைக்கும் இலாப நட்டங்களைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு அல்லது தேவையான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பதில்கள் கணக்காய்வுப் பந்திக்கு தாக்கம் செலுத்தாமையாலும் ஏனைய விடயங்களின் பிரகாரம் அந்த பந்தி தொடர்பில் கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கு எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 197 )

**6.14** மேற்குறித்த 5.3.3 ஆம் பந்தியில் அவதானிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் படிப்படியாக உயர்வடையும் போக்கு ஏற்படுவதற்கு மேற்குறித்த 5.1.7 பந்தியில் குறிப்பிடப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானம் நேரடியாக அல்லது மறைமுகமாகக் காரணமானதா என்பது குறித்து தீர்மானிப்பதற்குப் போதிய பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 197 முதல் 198 வரை)

## 7. பரிந்துரைகள்

7.1 இலங்கை மத்திய வங்கியால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களைப் போன்று நிலவும் நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகையிலும் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகையிலும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரும் சார்பான அல்லது எதிரான தாக்கங்களையும் இலங்கை வங்கியின் நோக்கங்களுக்கு இதனால் ஏற்படும் தாக்கங்களையும் நீண்ட காலத்திற்காகவும் குறுங்காலத்திற்காகவும் கருத்திற்கொண்டு குறித்த தீர்மானங்களுக்கு வர வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கு இயலுமான வகையில் பேணப்பட்டு வருதல்.

(மேற்படி பரிந்துரை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அந்த பரிந்துரை எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 198 )

7.2 இரண்டாம் நிலைச் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்காக போதிய தரவுகள் இலங்கை மத்திய வங்கியிடம் இல்லாத நிலையில் நிதிச் சந்தையை வழிநடத்தும் மற்றும் ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டை மேலும் ஆக்க பூர்வமான வகையில் மேற்கொள்ளவதை ஸ்தம்பிதமாக்குவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான சகல தரவுகளும் இலங்கை மத்திய வங்கியிடம் பேணப்படல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காததுடன், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பில் காட்டப்படுகின்ற வாய்மொழி சாட்சிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களின் பிரகாரம் மேற்படி பந்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் பந்தி நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 198 முதல் 205 வரை)

7.3 மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்ட முறிகள் முதிர்வடைந்து பணம் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக தமக்கு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பம் வரை அம் முறியின் உரிமையையும் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட விதம் குறித்த தகவல்களும் இலங்கை மத்திய வங்கியால் பேணப்படல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித

மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 205 முதல் 206 வரை)

7.4 நாட்டில் மத்திய வங்கி தொடர்பாக நிலவும் நம்பிக்கை, அவ் உத்தியோகத்தர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களின் உண்மைதன்மை சார்ந்திருப்பதனாலும் அந் நம்பிக்கையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊறுபடுத்தப்படாது பேணப்பட வேண்டியதன் காரணமாக அவ் உத்தியோகத்தர்கள் எடுக்கும் தீர்மானங்களின் உண்மைத்தன்மையை காலதாமதமின்றி காரணங்காட்டப்படக்கூடிய வகையில் சிற்சில வரையறைகளின் கீழ் அல்லது வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுதல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 206 )

7.5 சட்ட நிலைகளினதும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பல்வேறு நானாவித வரைவிலக்கணங்கள் மற்றும் விதிவிலக்குகள் இருந்த போதிலும் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாது இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையிலான உத்தியோகத்தர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய நிறுவனங்களிற்கும் இடையே ஏதேனும் பிணைப்பில் முரண்பாடுகள் நிலவுவதாயின் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏற்ற வெளிப்படுத்தலுடன் தமது பணியை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியின் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 206 )

7.6 இலங்கை மத்திய வங்கியால் எடுக்கப்படும் பெரும்பாலான தீர்மானங்கள் மொத்தப் பொருளாதாரத்திற்கும் நீண்ட காலத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் அத்தகைய மிக முக்கியம் வாய்ந்த, சிக்கலான மற்றும் உணர்ச்சிபூர்வமான தீர்மானங்களை எடுக்கையில் சரியான அடிப்படையில் அத் தீர்வுகளும் தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றனவா என சுயாதீனமான தரப்பினரின் ஆய்விற்கும் கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்படுவது மிக முக்கியமாகின்றமை அத் தீர்மானங்களிலிருந்து எழும் சாதகமான அவ்வாறே சாதகமற்ற விளைவுகளுக்கு மொத்த மக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி நேரிடுவதாலாகும். இதன் படி, அத்தகைய சிக்கலான தீர்மானங்களை முறையான மதிப்பீடு இன்றி மிகவும் எளிதாகவும் உடனடியாகவும் மேற்கொண்டு இதன் மூலம் ஏதேனும் பாதகமான விளைவு நேர்ந்துள்ளதா என்பதைப் பரீட்சிப்பதற்கு தேவையான தகவல்களும் இதற்காக ஆணை பெற்றுள்ள நிறுவகங்களுக்கு வழங்கப்படுவதற்கு தடைகள் நேரும் வகையில் நிதி சட்ட அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவில் குறிப்புகளின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் ஏற்பாட்டைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள இயலாத வகையில் அப் பிரிவை ஏற்ற வகையில் திருத்தங்களிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 207 )

7.7 இவ் அறிக்கையைத் தயாரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட தகவல்களிடையே காணப்பட்ட இரகசியத்தன்மையும் உணர்ச்சி பூர்வமான தகவல்களை சரியாக இனங்கண்டு தருமாறு மத்திய வங்கி ஆளுநருக்கு எழுத்து மூலம் கோரியிருந்ததுடன் (பின்னிணைப்பு xxxiv) இதற்கு வழங்கிய பதில் (பின்னிணைப்பு iii) இன்படி வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இரகசியமான தகவல்கள் என கருதப்படுவதற்கு நேர்ந்திருந்தது. ஆகையால் அரசாங்க கணக்காய்வால் அத்தகைய தகவல்களின் மூலம் இனங்காணப்பட்ட தகவல்கள் இவ் அறிக்கைக்கு அவ்வாறே உள்ளடக்கப்படாது அத் தகவல்கள் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அவர்கட்கு வழங்கப்படுவதாகவும் குறிப்பிட வேண்டியுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் மத்தியவங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்காமையாலும், குழுவினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட வினாக்களிற்கான பதிலளித்தல்கள் மூலம் கணக்காய்வு அறிக்கைக்கு தாக்கமேற்படாமையாலும், ஏனைய தகவல்களினால் அப் பந்திக்கு இணக்கமின்மை

காணப்படாமையாலும் அப் பந்திநாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு: பட்டோலையின் பக்க இல. 207 முதல் 208 வரை)

7.8 முதலாந்தர வணிகர்களுக்கிடையே முறிகளுக்கு உரித்தாக மேற்கொள்ளப்படும் உள்ளகக் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான நடைமுறையொன்றை வழிகாட்டி ஒன்றின் மூலம் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

(மேற்படி பந்தி தொடர்பில் மத்தியவங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்காமையாலும், குழுவினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட வினாக்களிற்கான பதிலளித்தல்கள் மூலம் கணக்காய்வு அறிக்கைக்கு தாக்கமேற்படாமையாலும், ஏனைய தகவல்களினால் அப் பந்திக்கு இணக்கமின்மை காணப்படாமையாலும் அப்பந்தி நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 209 )

7.9 முறிகளின் ஏலவிற்பனைக்கு உரித்தாக பிரசித்தப்படுத்தப்பட்ட ஏலவிற்பனைகளின் இறுதித் திகதியும் நேரமும் சிற்சில சந்தர்ப்பங்களில் நீடிக்கப்படுவதற்கான அங்கீகாரம் காணப்பட்டதுடன் அத்தகைய நீடிப்புகள் தவிர்க்க முடியாத மற்றும் நியாயப்படுத்தப்படக் கூடிய விடயங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 209 முதல் 210 வரை)

7.10 ஊழியர் சேமலாப நிதியம் பதிவு செய்யப்பட்ட முதலாந்தர வணிகர் அல்லாத போதிலும் முதன்மைக் கொடுக்கல்வாங்கல்களைப் போன்று முதன்மைச் சந்தையிலும் முறிகளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், ஊழியர் சேமலாப நிதியம் முதன்மைச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு மாற்று வழிகளாக வேறு முதலாந்தர வணிகர்களிடம் இரண்டாம் நிலைச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்யும் போக்கைக் காண்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இது வரையில் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் நிலவும் சேமலாப நிதியம் அக் கண்காணிப்பு மேலாக சுயாதீனமாக செயற்படக் கூடிய முதன்மை முகவராக நியமிக்கப்படல்.

(மேற்படி பந்தி தொடர்பில் மத்தியவங்கியினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்காமையாலும், குழுவினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட வினாக்களிற்கான பதிலளித்தல்கள் மூலம் கணக்காய்வு அறிக்கைக்கு தாக்கமேற்படாமையாலும், ஏனைய தகவல்களினால் அப் பந்திக்கு இணக்கமின்மை காணப்படாமையாலும் அப்பந்தி நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 210 முதல் 212 வரை)

7.11 இது வரையில் எதிர்வரும் மாதங்களின் நிதித் தேவைப்பாடு இலங்கை மத்திய வங்கி ஊடாக பொதுத் திறைசேரி பெற்றுக்கொள்வதுடன் ஆகக் குறைந்தது இதனை எதிர்வரும் மூன்று மாத காலம் வரை நீடித்தல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 212 )

7.12 மேற்குறித்தவாறு பொதுத் திறைசேரி பெற்றுக்கொண்ட நிதித் தேவையைச் சேகரித்துக்கொள்ளும் விதம் குறித்து முன்கூட்டியே தீர்மானித்தல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 212 )

7.13 இலங்கை மத்திய வங்கியால் முதலாந்தர வணிகர்கள் தொடர்பான போதிய கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். அதாவது கடந்த காலப்பகுதியின் போது ஓர் முதலாந்தர வணிகர் முறிவடைந்த காரணத்தால் அரசாங்கம் உள்ளடங்கலாக அவ் வணிகருடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்ட முதலீட்டாளர்களும் சிரமத்திற்கு உட்பட்டுள்ளனர். அத்தகைய நிலைகளைத் தவிர்க்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் அவர்கள் நிதி உறுதிப்பாடுகள் உள்ளடங்கலாக குறித்த போக்குகள் தொடர்பாக போதிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருத்தல்.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 213 )

7.14 இலங்கை மத்திய வங்கியால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் உள்ள இரகசியத் தன்மையைப் பேண வேண்டிய பதிவேடுகளை இனங்கண்டு தருமாறு பொதுத் திறைசேரிச் செயலாளரிடம் கோரப்பட்டது. இதற்கான பதிலளிக்கும் வகையில் திறைசேரி முறிகளை விநியோகிப்பதற்கு உரித்தான பொதுத்திறைசேரியின் செயற்பாடுகள் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அரசாங்கத்தின் கடன் தேவைப்பாடு மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிப்பதுடன் மட்டுப்படுத்தப்படுவதாக பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் தெரிவித்திருந்தார். எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கி தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளிற்குப் பொறுப்பான முக்கிய நிறுவனமாக பொதுத் திறைசேரியின் பணிகள் மேலே காண்பிக்கப்பட்டுள்ள சரளமான பணிக்கு மட்டுப்படுத்தப்படுவதாக கணக்காய்வில் உடன்பட முடியாதுள்ளது.

(மேற்படி பந்தி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித எதிர்ப்புக்களும் தெரிவித்திருக்காமையாலும் ஏனைய தகவல்களின் மூலம் அதற்காக கருத்தொருமித்தலின்மைகள் காணப்படாமையாலும் அப் பந்தி எவ்வித மாற்றமுமின்றி இந்த நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

(தொடர்பு : பட்டோலையின் பக்க இல. 213 முதல் 214 வரை)

## 8. முடிவுரை

8.1 மேற்குறித்த 5.1.17 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள தவிர்க்கப்படக் கூடியதாக இருந்த ரூபா 889,358,050 தொகையான மதிப்பீட்டு நட்டத்தையும் 5.2.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள தவிர்க்கப்படக் கூடியதாக இருந்த ரூபா 784,898,755 தொகையான மதிப்பீட்டு நட்டமான 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியும் 2016 மார்ச் 29 ஆம் திகதியும் நடாத்தப்பட்ட திறைசேரி முறிகளின் இரு ஏலவிற்பனைகளின் போது தவிர்க்கப்படக் கூடியதாக இருந்த ரூபா 1,674,256,805 கூட்டுத்தொகையான மதிப்பீட்டு நட்டத்தையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை தொடர்பாக அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என முடிவுரைக்கப்பட்டுள்ளது.

மேலும், நேரடி முறைக்கு திறைசேரி முறிகள் விநியோகிக்கப்படுவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் 2016 மே மாதம் வரை நேர்ந்துள்ள முறிகளின் விநியோகங்களுக்கு உரித்தாகவும் மதிப்பிடப்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்களைக் கணிப்பிட்டால் மேற்குறித்த மதிப்பீட்டு நட்டம் மேலும் உயர்வடையும் இயலுமை உள்ளமையையும் தவிர்க்க முடியாதுள்ளது.

8.2 இவ் அறிக்கையைத் தயாரிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட பந்திகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ள விடயங்களின் படி, மத்திய வங்கி ஆளுநரால் தமது பணிகளை மேற்கொள்கையில் மத்திய வங்கி ஆளுநர் ஒருவரால் எதிர்பார்க்கப்படும் நிலையில் தொழில் முறைக் கவனிப்புடன் செயற்பட்டதாக நிரூபணமாகவில்லை.

8.3 இவ்வறிக்கையைத் தயாரிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரித்தான அதிகாரங்களுக்கும் நோக்கெல்லைக்கும் உட்பட செயற்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக குற்றவியல் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடிவிற்கு வர முடியாத நிலையிலான சட்ட விரோத நடவடிக்கைகள் நேர்ந்துள்ளதா என்பதனை இங்கு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டிராமையால் அத்தகைய ஆய்வொன்று தேவையெனக் கருதப்படும் பட்சத்தில் இதற்காக நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்வது ஏற்றதென முடிவுரைக்கின்றேன்.

ஒப்பமிடப்பட்டது : எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில்.

- இந்த விசாரணையின் போது பொது முயற்சிகள் குழுவின் விசேட பரிசோதனைக்குட்பட்ட துறைகள் மற்றும் உரிய தொடர்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.
    - கொள்கை ரீதியான தீர்மானம் (தொடர்பு : பக்க இல. 231 முதல் 260 வரை)
    - வழிகாட்டல் கையேடு (தொடர்பு : பக்க இல. 260 முதல் 293 வரை)
    - ஏலமிடல் முறைமை மற்றும் நேரடி முறைமையின் உள்ளடக்கம் (தொடர்பு : பக்க இல. 293 முதல் 300 வரை)
    - தொடர்புடைய அமைச்சர் (தொடர்பு: பக்க இல. 301 முதல் 303 வரை)
    - நிதி அமைச்சின் கடமைப்பொறுப்புக்கள் (தொடர்பு : பக்க இல.303 முதல் 306 வரை)
    - இரண்டாந்தர சந்தை (தொடர்பு : பக்க இல. 306 முதல் 312 வரை)
    - ஊழியர் சேமலாப நிதியம் (தொடர்பு : பக்க இல. 312 முதல் 320 வரை)
    - ஏலமிடல் முறை மூலம் இயன்றளவு பணத்தை தேடிக்கொள்ளல் (As much as possible) (தொடர்பு : பக்க இல. 320 முதல் 327 வரை)